Registered as a Newspaper

பக்கங்கள் 16+8 விலை ரூ. 60


# உதயன்

சுடர் : 39
கதிர் : 70

ஞாயிற்றுக்கிழமை
04 பெப்ரவரி 2024

தை 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"நேற்றே சொன்னன் தானே உப்பிடித்தான் உவர் விளையாட்டுக் காட்டுவார் எண்டு. பாருங்கோவன் இன்னும் இருக்கு அவரின்ர கூத்து"

# தமிழர் தாயகத்தில் இன்று கரிநாள்

## கிளிநொச்சி, மட்டக்களப்பில் பேரணி

**யாழ்ப்பாணம், பெப்ரவரி 4**

**வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் இலங்கையின் சுதந்திர நாளை கரிநாளாக அறிவித்து இன்று கவனவீர்ப்புப் பேரணி கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் என்பன இணைந்து இவற்றை மேற்கொள்ளவுள்ளன.**

13

## போராட்டங்களுக்கு மட்டக்களப்பில் தடை

### யாழில் தடை விதிக்க மறுப்பு

யாழ்ப்பாணம், பெப். 4

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் இன்று முன்னெடுக்கப்படவுள்ள கரிநாள் போராட்டத்துக்கு தடையுத்தரவு கோரும் யாழ்ப்பாணப் பொலிஸாரின் முயற்சி பிசுபிசுத்துள்ளது. இதேவேளை - மட்டக்களப்பு மாவட்டத்தில் பொலிஸாரால் தடையுத்தரவு

13

## இரு தேசங்கள் உண்டென்பதை கரிநாள் பேரணியில் பங்கேற்று முரசறைவோம்

### நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் அறைகூவல்

யாழ்ப்பாணம், பெப். 4

இந்த நாட்டில் இரண்டு தேசங்கள் உண்டு என்பதை மீண்டும் ஒரு தடவை உணர்த்துவதற்கு, தமிழர்கள் நாங்கள் ஓரணியாக கரிநாள் போராட்டத்தில் பங்கேற்கவேண்டும் - இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் சமூகத்தால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள கரிநாள் பேரணி கிளிநொச்சியில் இலங்கையின் சுதந்திர நாளான இன்று இடம்பெறவுள்ளது.

13

## வெளிநாட்டுக்கு அனுப்புவதாக 55 லட்சம் ரூபா மோசடி

### இடைத்தரகர் கைது

யாழ்ப்பாணம், பெப். 4

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி 55 இலட்சம் ரூபா மோசடி செய்துள்ளதாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக இடைத்தரகர் ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் வெளிநாடு செல்வதற்காக கொழும்பைச் சேர்ந்த முகவரிடம் பகுதி பகுதியாக 55 இலட்சம் ரூபா பணத்தை வங்கி ஊடாக வைப்புச்

15

## கெஹலியவுக்கு எதிராக பிரேரணை

விரிவு:- பக்.15

## கெஹலிய ரம்புக்வெல மருத்துவமனையில்

கொழும்பு, பெப். 4

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மருத்துவரின் பரிந்துரையில் சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட ரம்புக்வெலவை, மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தியபோது நீதிவான் எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## ஓரணியாகப் பயணிக்க விட்டுக்கொடுப்புக்குத் தயார்

### செல்வம் எம்.பி. தெரிவிப்பு

மன்னார், பெப். 4

தமிழரசுக் கட்சியையும் இணைத்துக்கொண்டு பொதுச் சின்னத்தில் நாங்கள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு எந்தவித விட்டுக்கொடுப்புக்கும் தயாராக உள்ளோம் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

13

## 21 பவுண் தாலிக்கொடியை நூதனமாக திருடிய பெண்

யாழ்ப்பாணம், பெப். 4

நம்பிக்கை அடிப்படையில் 21 பவுண் தங்கத் தாலிக் கொடியை வாய்பேசமுடியாத பெண்ணொருவரிடம் வாங்கிய யுவதி ஒருவர் அதை விற்பனை செய்துவிட்டு அதற்குப் பதிலாக தங்கமுலாம்பூசிய தாலிக்கொடியைத் திருப்பிக் கொடுத்து ஏமாற்றியுள்ளார். இது தொடர்பில் சந்தேகநபரான 26 வயதுடைய யுவதி பொலிஸாரால்

14

## விபத்தில் காயமடைந்த மாணவன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 4

கடற்படையின் வாகனத்துடன் மோதுண்டு காயமடைந்து சிகிச்சைபெற்று வந்த மாணவன் நேற்று உயிரிழந்துள்ளான்.

மன்னார், மறிச்சுக்கட்டியைச் சேர்ந்த முஹமட் முத்திஹம் சாத் (வயது - 19) என்ற மாணவனே உயிரிழந்துள்

14



## சாந்தன் இலங்கை வருகை: சாதகமாகப் பரிசீலிப்பேன்

### சிறீதரன், மனோவிடம் ரணில் நேரில் உறுதி

கொழும்பு, பெப். 4


இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு இலங்கை திரும்புவதற்குக் காத்திருக்கும் சாந்தனை, நாட்டுக்குள் வர அனுமதிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன்

15

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கையூட்டு வாங்கிய பொலிஸார் கைது!

கொழும்பு, பெப்.4
10 ஆயிரம் ரூபா கையூட்டுப் பெற்ற குற்றச்சாட்டில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
மஹாவெல பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் இருவரே கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
போக்குவரத்து விதிமீறல் வழக்குத் தொடர்பான அபராதத்தொகையைக் குறைப்பதற்காக இவர்கள் கையூட்டுப் பெற முயன்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# ஜனாதிபதி ரணிலின் பரிந்துரை நிராகரிப்பு



கொழும்பு, பெப்.4
**மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நிஷ்சங்க பந்துல கருணாரத்னவை உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்திருந்த பரிந்துரையை அரசமைப்புப் பேரவை நிராகரித்துள்ளது.**

இந்த நிராகரிப்புக்கான காரணத்தைத் தெரிவித்து, அரசமைப்புப்பேரவை ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளது என்று நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
நிஷ்சங்க பந்துல கருணாரத்னவை உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்கும் பரிந்துரையை ஜனாதிபதி, கடந்த வாரம் அரசமைப்புப்பேரவைக்கு அனுப்பியிருந்தார். ஜனாதிபதியின் இந்தப் பரிந்துரையை ஆராய அரசமைப்புப்பேரவை கடந்த 30 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கூடியது.
பிரதமர் தினேஷ் குணவர்த்தன, அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் ஆகியோர் ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அனுமதி வழங்கினர். எனினும் பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஜனாதிபதியின் பரிந்துரையை நிராகரித்துள்ளனர்.
இதற்கு முன்னர் தேசபந்து தென்னக்கோனை பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுப்பி இருந்த பரிந்துரையை அரசியலமைப்புப்பேரவை நிராகரித்திருந்தது. (எ-இ)

# சிப்பாய் கொலை

கொழும்பு, பெப்.4
கம்பஹா மாவட்டத்தில் மினுவாங்கொட பிரதேசத்தில் திருட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பில் விசாரிக்கச் சென்ற முன்னாள் சிப்பாய் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு நடந்துள்ளது. சிலநாள்களுக்கு முன்னர் சிப்பாயின் வீட்டுக்குள் நுழைந்து இவரது மனைவியின் தங்க மாலையைத்திருடிச்சென்றுள்ளனர். சிப்பாய் இது தொடர்பாக ஒருவரிடம் விசாரிக்கச் சென்ற போது இருவருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. அதில் மற்றையவர் கூரிய ஆயுதத்தால் சிப்பாயைத் தாக்கி கொலை செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-இ)

# 770 பேர் கைது

கொழும்பு, பெப்.4
நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் 'யுக்திய' நடவடிக்கையில் நேற்று அதிகாலையுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் 770 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
போதைப்பொருள் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய 567 பேரும், குற்றப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் உள்ள 203 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

# 1,500 பொலிஸார் கடமையில்

கொழும்பு, பெப்.4
76 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு கொழும்பில் விசேட போக்குவரத்து கடமைகளுக்காக சுமார் ஆயிரத்து 500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
அத்துடன், பாதுகாப்பு மற்றும் ஏனைய கடமைகளுக்காக 4 ஆயிரம் அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று போக்குவரத்துப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார்.
இதேவேளை, கொழும்பில் நேற்றும், இன்றும் விசேட போக்குவரத்துத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# மீளப்பொருத்தப்பட்டது துண்டிக்கப்பட்ட கை!

கொழும்பு, பெப்.4
பெண் ஒருவரின் துண்டிக்கப்பட்ட கையை மீளப் பொருத்தியுள்ளனர். கண்டி தேசிய மருத்துவமனையின் விசேட சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் அமில சசங்க ரத்நாயக்க தலைமையிலான மருத்துவக் குழுவினர்.
தென்னை அறுக்கும் இயந்திரத்தை சுத்தம் செய்யும் போது, திடீரென இயந்திரம் வேலை செய்ய ஆரம்பித்ததால், வலது கையின் முழங்கைக்கு மேல் உள்ள பகுதி, இயந்திரத்தில் சிக்கி, தோளில் இருந்து, நான்கு அங்குலம் தள்ளி வெட்டுப்பட்டுள்ளது.
கண்டி மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட ஆறு மணித்தியால சத்திரசிகிச்சையின் பின்னர் கை வெற்றிகரமாக இணைக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# 22 கைதிகள் விடுதலை

யாழ்ப்பாணம், பெப்.4
76ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டுநாடு பூராகவும் சிறைச்சாலைகளில் இருந்து ஜனாதிபதியின் விசேட பொது மன்னிப்பின் அடிப்படையில் 600 கைதிகள் விடுதலைசெய்யப்படவுள்ளனர். யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து 22 பேர் விடுவிக்கப்படவுள்ளனர்.
சிறு குற்றங்கள் புரிந்து நீதிமன்றங்களில்தண்டப் பணம் செலுத்தாததால் சிறைச்சாலையில்தடுத்து வைக்கப்பட்ட22 கைதிகள் விடுவிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

# கொழும்பு வந்தது இந்திய நீர்மூழ்கி!

கொழும்பு, பெப்.4
இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று உத்தியோகபூர்வ பயணமாக நேற்றுக் காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.
இந்த நீர்மூழ்கிக் கப்பலில் 53 கடற்படையினர் கடமையாற்றுகின்றனர். இவர்கள் இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் நாட்டில் உள்ள முக்கியமான இடங்களுக்குப் பயணம் மேற்கொள்ள உள்ளனர்.
நீர்மூழ்கிக் கப்பல் இலங்கையில் இருக்கும் காலப்பகுதியில் அதன் செயற்பாடுகள் தொடர்பில் இலங்கைக் கடற்படையினருக்கு விசேட விளக்கமளிப்பு நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. இந்தியக் கடற்படையின் இந்த நீர்மூழ்கிக் கப்பல் நாளை 5 ஆம் திகதி இலங்கையில் இருந்து புறப்பட்டுச் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# குத்திக்கொலை

கொழும்பு, பெப்.4
மத்துகம பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.
நேற்று அதிகாலை நடந்த இந்தச் சம்பவத்தில் ஓவிட்டிகலவைச் சேர்ந்த 38 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் எவரும் இது வரை கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# குற்றவாளிகளை இனங்காணும் பொறிமுறை கட்டுநாயக்கவில்!

கொழும்பு, பெப். 4
கட்டுநாயக்க விமான நிலையத்தில் நாட்டுக்குள் நுழையும் வெளியேறும் அனைவரையும் அடையாளம் காணும் வகையில் புதிய பொறிமுறையொன்று அமைக்கப்படவுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.
அதன்படி பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகள் மற்றும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடும் நபர்களின் தகவல்களை உள்ளடக்கி எல்லைக் கட்டுப்பாட்டு அமைப்பு உருவாக்கப்படவுள்ளது.
இதனூடாக அத்தகைய நபர்கள் நாட்டுக்குள் நுழையவோ அல்லது வெளியேறவோ முயன்றால் தானாக அடையாளம் காணமுடியும்.
ஒருவர் குற்றம் செய்துவிட்டு நாட்டை விட்டுத் தப்பிச் செல்ல முயன்றால், அதை உடனடியாக இந்த எல்லைக் கட்டுப்பாட்டு அமைப்பு தடுக்கும். இந்த எல்லைக் கட்டுப்பாட்டு அமைப்பு முறைமையை வழங்குவதற்கு அமெரிக்க அரசாங்கம் இணங்கியுள்ளது என்றும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டது. (ச-இ)

# நெல்லியடியில் நகை திருட்டு இரு சந்தேகநபர்கள் கைது

நெல்லியடியில் நீதிமன்ற உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் நகைகள் திருடப்பட்ட சம்பவத்தில் தேடப்பட்டு வந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
39 மற்றும் 27 வயதான இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், திருடப்பட்ட நகைகள் மீட்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த ஆண்டு முற்பகுதியில் நடந்த இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பிராந்திய குற்றத் தடுப்புப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தொடர் விசாரணைகளுக்கமைய இருவரும் நெல்லியடிப் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு நெல்லியடிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-26-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்செய்கை பெரும் வீழ்ச்சி நெல் விலையும் பாதாளத்தில்

## திணறும் விவசாயிகள்



**முல்லைத்தீவு, பெப்.4**

**உடையார்கட்டுக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இந்தநிலையில், தனியார் மிகக் குறைந்த விலையில் அவற்றைக் கொள்வனவு செய்வதால் பெரும் பொருளாதார இழப்பைச் சந்திக்க வேண்டியுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

உடையார்கட்டுக்குளத்தின் கீழ் ஆயிரத்து 556 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் கடந்த ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. தற்போது அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், வழமையாக ஒரு ஏக்கரில் 25 மூடை அறுவடை செய்யப்படும் நிலையில், இம்முறை 10 முதல் 15 வரையான மூடைகளே கிடைக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

"மானியமாக முன்னர் உரம் வழங்கப்பட்ட நிலையில், இம்முறை உரத்துக்குப் பதிலாக 6 ஆயிரம் ரூபா பணம் தரப்பட்டது. உரத்தின்விலை 9 ஆயிரம் ரூபா என்பதால் நாம் எமது கைக்காசைக் கொடுத்தே உரம் கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. களைநாசிகளின் விலையும் அதிகரித்துள்ளது. டீசல் விலை ஏற்றத்தால் அறுவடைக் கூலி 17 ஆயிரம் ரூபாவரையில் சென்றுள்ளது. முன்னர் 8 ஆயிரம் ரூபாவே இருந்தது" என்று விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

"8 ஆயிரம் ரூபா விற்க வேண்டிய நெல்லை 5 ஆயிரம் ரூபாவுக்குக் கொடுக்க வேண்டியுள்ளது. நெல்லுக்கான நிரந்தர விலை இல்லை. அறுவடை முடிந்து 2 மாதங்களின் பின்னர்தான் விலையை அறிவிப்பார்கள். அது பயனற்றது. உரம், களைநாசினிக்காக வாங்கிய பணத்தைக் கட்ட முடியாத நிலைமையில் உள்ளோம். அரசாங்கம் நெல்லுக்கான நிர்ணய விலையை உடனடியாக அறிவிக்கவேண்டும்" என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

காப்புறுதியும் விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. பயிரிழப்புக்கான இழப்பீடுகளும் வழங்கப்படுவதில்லை. இது தொடருமானால் நாம் விவசாயத்தைக் கைவிட்டு கூலி வேலைக்குத்தான் செல்ல நேரிடும் என்றும் விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (எ-19)

# பெறுமதியான ஆம்பரை வைத்திருந்தவர் கைது!

யாழ்ப்பாணம், பெப்.4

கடல் புதையலாகக் கருதப்படும் ஆம்பரை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் பருத்தித்துறைப் பொலிஸாரால் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை சக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபரிடம் இருந்து 236 கிராம் ஆம்பர் மீட்கப்பட்டுள்ளது என்றும், அதன்பெறுமதி பல லட்சம் ரூபா எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சக்கோட்டையில் கரையொதுங்கியிருந்த ஆம்பரை எடுத்த நபர், இது தொடர்பாக நண்பர்களுக்குத் தெரிவித்ததை அடுத்தே, இந்த விடயம் பகிரங்கமானது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-100)

# இடமாற்றம் வழங்கக்கோரி அரச சாரதிகள் போராட்டம்

கடந்த 5 ஆண்டுகளாக சாரதிகளின் இடமாற்றம் தடைப்பட்டுள்ளது. இடமாற்றம் நடைமுறைக்கு வராவிட்டால் தொடர் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நிலைமை ஏற்படும் என்று வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தின் தலைவர் தவராசா துஷாந் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விண்ணப்பம் கோரப்பட்டு இடமாற்றப் பட்டியல் வெளியிடப்பட்டிருந்தபோதும், கோரிக்கைக்கு இணங்க அந்த இடமாற்றம் நிறுத்தப்பட்டது. எமது இடமாற்ற உரிமையையும், தாபன விதிக்கோவையையும் நடைமுறைப்படுத்த வலியுறுத்தி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளோம். நாளை திங்கட்கிழமை காலை 8 மணியளவில் ஆளுநர் செயலகத்துக்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டு, பேரணியாகச்சென்று ஆளுநர் அலுவலகத்தில் மனு கையளிக்கப்படும். தொடர்ந்து பிரதம செயலாளர் அலுவலகத்துக்கும் பேரணியாகச் சென்று அங்கும் மனு கையளிக்கப்படும். எதிர்வரும் 10ஆம் திகதிவரை தொடர்ச்சியான தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படும் - என்றார். (எ-27-125)

# நீர்ப்பற்றாக்குறையால் அழியும் நெற்பயிர்கள்!

அரிப்பு கிழக்கு விவசாயிகள் கவலை

மன்னார், பெப்.4

முசலிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அரிப்பு கிழக்குப் பிரதேசத்தில் நீர்ப்பற்றாக்குறை காரணமாக விவசாயம் அழியும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கோணாங்குளத்தில் இருந்தே வயல்களுக்கு நீர் வழங்கப்படுகின்றது. தற்போது குளத்தில் நீர்மட்டம் குறைந்துள்ளதால், நீர் வழங்கலில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. நீர்ப்பற்றாக்குறையால் குடலை மற்றும் கதிர்த் தன்மை கொண்ட பயிர்கள் அழியும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடன்களைப் பெற்றும், சொத்துகளை அடமானம் வைத்துமே விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். பயிரழிவால் ஏற்படும் பொருளாதார இழப்பை அவர்களால் ஈடு செய்ய முடியாது. அதிகாரிகள் ஏற்பட்டுள்ள நீர்ப்பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-213)

# இலங்கை வந்தார் தாய்லாந்து பிரதமர்

கொழும்பு, பெப்.4



தாய்லாந்துப் பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் நேற்று இலங்கை வந்தடைந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று நாட்டுக்கு வந்துள்ள அவர், இலங்கையின் 76 ஆவது சுதந்திரதின விழாவில் பிரதம அதிதியாக பங்கேற்கவுள்ளார். இந்தப் பயணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தரப்பினருடன் தாய்லாந்துப் பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார். இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்விலும் அவர் பங்குபற்றவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

# நிஷாந்தவின் மனைவி தேசியப் பட்டியல் எம்.பி.?

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மனைவியான சட்டத்தரணி திருமதி சமரி பெரேராவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் உறுப்பினராக நியமிப்பது தொடர்பில் அந்தக் கட்சி கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பில் நாமல் ராஜபக்ச தலைமையிலான இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஏற்கனவே கலந்துரையாடலை நடத்தியுள்ளது என்று கூறப்படுகின்றது. இந்தப் பிரேரணை கட்சியின் மத்தியகுழு மற்றும் செயற்குழுவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதேவேளை, இந்தப் பிரேரணைக்கு கட்சியின் உயர்மட்டத் தலைமையின் ஆதரவு கிடைத்துள்ளது என்று அந்தக் கட்சி வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது. (எ-இ)

## பல்கலை மாணவரின்

# கரிநாள் பேரணிக்கு விக்னேஸ்வரன் ஆதரவு

யாழ்ப்பாணம், பெப்.4

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாள் எனப் பிரகடனப்படுத்தி கிளிநொச்சி நகரில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்துக்கும் பேரணிக்கும் தமிழ் மக்கள் கூட்டணி தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றது.

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கட்டமைப்பு சார் இனப்படுகொலைகளுக்குத் தீர்வு காணும் வகையில் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து யாழ். பல்கலைக்கழக சமூகம் முன்னெடுக்கின்ற போராட்டத்துக்கு நாம் ஆதரவு வழங்குவதோடு சகல தரப்புகளையும் பங்கேற்குமாறு அழைக்கின்றோம் என்று அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (எ-இ)

காணி விற்பனைக்கு

புத்தூர் - மட்டுவில் பிரதான வீதியில் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

1 பரப்பின் விலை 3லட்சம்.

விலை பேசித்தீர்மானிக்கலாம்.

பார்வையிடும் நேரம்:

காலை: 8.30 - மாலை 6.00

தொடர்புகளுக்கு:

076 659 0583

076 109 8504

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒருமாதத்துக்கும் மேல் தேங்கியுள்ள வெள்ளம்

## குடியிருப்பாளர்கள் அந்தரிப்பு

**கிளிநொச்சி, பெப்.4**

**புதுக்குடியிருப்பு, தேராவில்குளத்தை அண்மித்து வாழும் மக்கள் குடியிருப்புகளுக்குள் ஒரு மாதத்துக்கும் மேலாக வெள்ளம் தேங்கியிருப்பதால் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று மக்கள் தெரிவித்தனர்.**

தேங்கியுள்ள வெள்ளத்தை வெளியேற்ற உரிய அதிகாரிகள் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேராவில்குளத்தை அண்மித்து 9 குடும்பங்கள் வாழ்கின்றன. கடந்தமாதம் பெய்த கடும் மழை காரணமாக அந்தப் பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

குடியிருப்புக்களுக்குள் வெள்ளம் தேங்கியிருப்பதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கின்றனர். 22 நாள்களுக்கு மேலாக இடைத்தங்கல் முகாம்களில் தங்கவேண்டி ஏற்பட்டிருக்கின்றது.

இந்தப் பகுதிக்கு வந்த அரச அதிகாரிகள் குறித்த பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தனர். ஆயினும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்தப் பகுதியில் உரிய வடிகால்கள் இல்லாதமையே இவ்வாறு நீர் தேங்கக் காரணமாக இருக்கின்றது. இதனால் மாணவர்கள் முதல் முதியோர் வரையில் பலரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனவே அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-113)

## கொக்குத்தொடுவாய்
# புதைகுழி வழக்கு பெப். 22ஆம் திகதி

முல்லைத்தீவு, பெப்.4

முல்லைத்தீவு- கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு தொடர்பான வழக்கு எதிர்வரும் 22ஆம் திகதி முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

அகழ்வுப் பணிகள் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி குறிப்பிடப்படிருந்தாலும் அதற்கான சாதக நிலைகள் குறித்தும் தொடர்ந்து முன்னெடுக்கின்ற விடயங்கள் தொடர்பாகவும் வழக்குத் திகதியில் ஆராயப்படவுள்ளன.

ஏற்கனவே 5.7 மில்லியன் ரூபா அகழ்வுப் பணிகளுக்காக நீதியமைச்சால் ஒதுக்கப்பட்ட நிலையில் ஏற்பட்ட செலவினங்கள் போக மிகுதிப் பணத்திலேயே அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-ஒ-125)

# கடவுச்சீட்டு கிடைக்காததால் மரத்தில் ஏறிப் போராட்டம்!

வவுனியா.பெப்.4

கடவுச்சீட்டுக் கிடைக்காததால் மனமுடைந்த ஒருவர் மரத்தின் மீதேறிப் போராட்டம் நடத்தியதை அடுத்து, அவருக்கு கடவுச்சீட்டு வழங்க உறுதியளிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் வவுனியா பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

திருகோணமலை மஹாயபுர பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய ஒருவர் கடவுச்சீட்டுப் பெறுவதற்காகப் பிராந்திய அலுவலகத்துக்கு வந்துள்ளார். மூன்று தினங்கள் அங்கு சென்றபோதும், அவரால் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று கூறப்படுகின்றது.

இந்தநிலையில் அவர் திடீரென அங்குள்ள மரம் ஒன்றில் ஏறிப் போராட்டத்தில் ஈடுபட்டார். உயிரை மாய்த்துக்கொள்ளப் போவதாக அவர் அச்சுறுத்தியதால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

அதையடுத்து பிராந்திய அலுவலக உத்தியோகத்தர்கள் கடவுச்சீட்டு வழங்கப்படும் என்று உறுதியளித்ததை அடுத்து அவர் தனது போராட்டத்தைக் கைவிட்டார். (ப-110)

# அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல்

சாவகச்சேரி, பெப்.4

தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்த வருட வரவு-செலவுத் திட்டத்தில் நிதி பயன்படுத்துவது தொடர்பான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், கணக்காளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்துகொண்டனர். (ப-9,131)

# வாழைக்குலை திருட்டு

யாழ்ப்பாணம், பெப்.4

பிரான்பற்றில் உள்ள வாழைத்தோட்டத்தில் 9 வாழைக்குலைகள் திருடப்பட்டுள்ளன என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-125)

# மருத்துவ மரங்கள் கையளிப்பு

பளை, பெப்.4

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தினால் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மருத்துவ செய்கை மரக்கன்றுகள் விநியோகம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் ஆரம்பமான நிகழ்வு "சுவதரனி மருத்துவ செய்கை வாரம்" என்னும் பெயரில் எதிர்வரும் 7 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது. (ப-9)

## கிளிநொச்சியில்
# பெண்கள் மீது வன்முறை; கடந்த ஆண்டில் உயர்வு

கிளிநொச்சி, பெப். 4

கிளிநொச்சி மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டை விடவும் 2023 ஆம் ஆண்டில் பெண்களுக்கெதிரான வன்முறை, குடும்பப் பிரச்சினைகள் தொடர்பில் அதிகளவு முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் பெண்கள், சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் மற்றும் பால்நிலை தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோது இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் பெண்கள், சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான மாற்றுநடவடிக்கை தொடர்பிலும் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் குறித்து முறைப்பாடு செய்ய அறிமுகப்படுத்தப்பட்ட 109 என்ற தொலைபேசி இலக்கம் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. (ச-113)

# கஞ்சா மீட்பு

பூநகரி, பெப்.4

2 கிலோ 100 கிராம் கேரளா கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் பூநகரி, பள்ளிக்குடாவைச் சேர்ந்த 43 வயதான நபர் ஒருவர் பூநகரிப் பொலிஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப-13)

# சைக்கிள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், பெப்.4

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரு வேறு இடங்களில் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, மானிப்பாய் சம்பந்தப் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றும் கடந்த 30ஆம் திகதி காணாமல் போயுள்ளது. இதுதொடர்பாகவும் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒக்ரோபரில் தேர்தல்

கொழும்பு, பெப்.4
எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலிதரங்கேபண்டார தெரிவித்துள்ளார்.
"அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் போட்டியிடுவார். அவரது வெற்றிக்காக உழைக்க அனைவரும் தயாராக வேண்டும்.
இரண்டு வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர், ரணில் விக்கிரமசிங்க நாட்டைச் சரியான பாதைக்குக் கொண்டு சென்று பொருளாதாரத்தை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்" என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

## நாட்டைக் காப்பாற்றவே ரணிலுக்கு ஆதரவாம்!

### அமைச்சர் மனுஷ தெரிவிப்பு

கொழும்பு, ஜன.4
இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நாடு நெருக்கடியில் இருந்தபோது, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கமட்டுமே அந்தச் சவாலை எதிர்கொண்டார். நாட்டு நலனுக்காகவே நாம் அவருக்கு ஆதரளித்தோம் என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். "எங்களுக்கு கட்சி, நிறம் தேவையில்லை. நாட்டு மக்கள் வெற்றிபெறவேண்டியதே அவசியமாகும். சிரமவாசனா நிதியம் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கானது. பிள்ளைகளைக் கட்டியெழுப்பவேண்டும் என்பதற்காகவே ஜனாதிபதி இவற்றையெல்லாம் செய்கிறார்.
என்னுடைய இந்தப் பயணத்தில் கைகோர்த்துச்செல்ல உங்களை அழைக்கிறேன்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## பொலிஸ் வாகனம் மீது புளியங்குளத்தில் தாக்குதல்

வவுனியா, பெப். 4
புளியங்குளம் பொலிஸ் நிலைய வாகனத்தின் மீது தாக்குதல் மேற்கொண்ட சந்தேகநபரை கடந்த புதன்கிழமை இரவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.
சந்தேகநபரைக் கைது செய்வதற்காகச் சென்ற பொலிஸாரின் வாகனத்தின் மீது வீதியில் நின்ற நபரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனையடுத்து சந்தேகநபரை புளியங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஒ-18)

## இலங்கையில் உள்ளது பொருளாதார சிக்கலே

### ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது



கொழும்பு, ஜன.4
நாட்டில் அரசியல் பிரச்சினை இருந்தால் அதற்குத் தீர்வுகாண பல தலைவர்கள் இருக்கின்றனர். ஆனால் தற்போதுள்ள பொருளாதாரப் பிரச்சினைக்கு ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே தீர்வு காணமுடியும்.
- இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.
"நாட்டில்அரசியல்பிரச்சினை இல்லை. பொருளாதாரப் பிரச்சினையே இருக்கிறது. பொருளாதாரப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டபின்னர் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகாண மற்றவர்களும் முன்வர முடியும்.
எமது எதிர்காலச் சந்ததியினரைப் பாதுகாத்துக்கொள்ள நாடு பொருளாதார ரீதியில் ஸ்திரமடையவேண்டும். அதற்காக ரணில்விக்கிரமசிங்கவை தொடர்ந்தும் ஜனாதிபதிப் பதவியில் இருத்துவதற்கு அனைவரும் ஒன்றுபடவேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-இ)

## மஹிந்த என்றால் அநுரவுக்குப் பயம்!

### ஜோன்ஸ்டன் எம்.பி. கண்டுபிடிப்பு



கொழும்பு, பெப். 4
மஹிந்த ராஜபக்ச மீதுள்ள பயம் காரணமாகவே அநுரகுமார திஸாநாயக்க, அவரது தொண்டையில் இரத்தம் வரும்வரை திட்டிக்கொண்டிருக்கின்றார் என்று பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் தற்போதும் மிகப்பெரிய கட்சியாக பொதுஜன பெரமுனவே இருக்கின்றது. இதன் காரணமாகவே அநுர குமார போன்றவர்கள் எமது கட்சியை விமர்சிக்கின்றனர். ராஜபக்சவினர் மிகவும் வலுவாக இருக்கின்றனர். அவர்கள் பலவீனமாக இருந்தால் எவரும் விமர்சிக்கமாட்டார் கள். ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் 7 மாதங்கள் இருக்கின்றன. இதனால் நாங்கள் எதற்கும் அவசரப்பட மாட்டோம்-என்றார். (ம)

## பஸ் இல்லை காலே துணை

### முல்லை. ஆனந்தபுரம் மக்கள் விசனம்

முல்லைத்தீவு, பெப். 4
முல்லைத்தீவு ஆனந்தபுரம், இரணைப்பாலை கிராமங்களுக்குப் பேருந்துச் சேவையின்மையால் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடுகிறது என்று கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
ஆனந்தபுரம் கிராமத்திலிருந்து நகர்ப்புறங்களுக்கு செல்ல வேண்டுமாயின் பல கிலோமீற்றர் தூரம் நடந்துசென்றே அங்கிருந்து பஸ்களில் பயணிக்க வேண்டியுள்ளது. இங்குள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இந்த நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.
எனவே இதுதொடர்பில் அதிகாரிகள் கவனம்செலுத்தி எமது கிராமங்களுக்கு பேருந்துச் சேவை இடம்பெற வழிவகுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச- 13)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்படலாம். உறவினர்கள் வழியில் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. உங்கள் யோசனையை குடும்பத்தினர் ஏற்றுக்கொள்வார்கள்.

**இடபம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். குடும்பத்தில் பெரி யவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். நன்மைகள் அதிகரிக்கச் செய்யும். மற்றவர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**மிதுனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண் விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும்.

**சிம்மம்:** வரவும் – செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடி இருக்கும்.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். வியாபாரம் வழக்கம்போலவே இருக்கும். தேவையான பணம் கிடைக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். மனஅமைதி ஏற்படும்.

**விருச்சிகம்** : உறவுகளால் நன்மை ஏற்படும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். உடல்நலனில் கவனம் தேவை. வியாபாரத்தில் விற்பனை எதிர்பார்த்தபடி இருக்கும்.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைக்கக்கூடும். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாயின் விருப்பத்தை பூர்த்தி செய்வீர்கள். பிணக்குகள் நீங்கும். எதிர்பாராத செலவுகள் அதிகரிப்பதால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# நாட்காட்டியில் ஒரு கறுப்புப் பக்கம்!

ஸ்ரீலங்காவின் 76ஆவது சுதந்திரதினத்தைக் கொண்டாடுவதற்காக தெற்கில் பெரும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், தெற்குக்கு முற்றாக முரணான நிலையிலேயே தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கு இந்தச் சுதந்திரதினத்தை எதிர்கொண்டிருக்கின்றது. ஆக, ஒரே தெருவில் மங்கல அமங்கல ஓசைகள் கேட்பதைப்போன்றதான நிலையிலேயே ஸ்ரீலங்காவின் சுதந்திரதினக் கொண்டாட்டம் அமைந்திருக்கின்றது.

ஸ்ரீலங்காவில் வடக்கு - கிழக்கைத் தாயகமாகக் கொண்ட தமிழ்த் தேசத்தை ஆக்கிரமித்திருந்த ஆங்கிலேயர் தாம் கொண்டிருந்த ஆக்கிரமிப்பு மேலாதிக்கத்தை, இந்தத் தீவின் இன்னொரு தேசமாகிய பௌத்த சிங்கள தேசத்திடம் தாரைவார்த்த கரிநாளாகவே பெப்ரவரி நான்காம் திகதியை அணுகவேண்டிய துரதிர்ஷ்டமான நிலைக்குத் தமிழர்கள் இன்று தள்ளப்பட்டுள்ளனர்.

சுதந்திர ஸ்ரீலங்காவுக்கு இன்று 76 வயதாக இருந்தாலும், தமிழர்கள் மீதான சிங்களப் பேரினவாத அடக்குமுறை 95 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழைமையுடையது. 1931ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேயேர்கள் ஸ்ரீலங்காப் பிரதிநிதிகளிடம் பொறுப்பாட்சியை ஒப்படைத்தனர். அன்று தொடங்கிய சிங்கள - பௌத்த தேசத்தின் இனவழிப்பு நடவடிக்கைகள், ஸ்ரீலங்கா சுதந்திரம் அடைந்த நாளான 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதியுடன் ஏகப்பட்ட அதிகாரங்களுடன் முழுமையான வேகம் பெற ஆரம்பித்தன. அன்று முதல் இன்றுவரை இரண்டு லட்சத்துக்கும் மேலான தமிழ் மக்களைக் கொன்றும் பத்து லட்சத்துக்கும் அதிகமானவர்களை புலம்பெயர வைத்தும், பல்லாயிரம் தமிழர்களை காணாமல்போகச் செய்தும், பலநூறு தமிழர்களை பல்லாண்டுகளாக சிறைகளில் அடைத்தும், தமிழர்களின் தாயகத்தில் பல ஆயிரம் சதுர கிலோமீற்றர் நிலங்களை பலவழிகளிலும் அபகரித்தும், தமிழர்களின் பல ஆயிரம் கோடி செல்வங்களை அழித்தும் சிங்களப் பேரினவாதப் பூதம் தன் பசியாற்றியிருக்கின்றது. அதுமட்டுமல்லாது தனிச்சிங்களச்சட்டம், கல்வியில் தரப்படுத்தல், வேலைவாய்ப்புகளில் பாரபட்சம், அபிவிருத்தியில் புறக்கணிப்பு என சிங்கள பௌத்த தேசம், தமிழர்களை தொடர்ச்சியாக ஓரம்கட்டியும் வந்துள்ளது.

கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுப் பதற்றத்தில் இருந்தும், எட்டுத் தசாப்தகால அரசியலில் இருந்தும், மூன்று தசாப்தகால ஆயுதப் போராட்டங்களில் இருந்தும் எந்தவொரு பாடத்தையும் சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் இன்றளவும் கற்றாகவில்லை. காணாமற்போனவர்களின் விவகாரம், காணி அபகரிப்பு, பௌத்த மயமாக்கல், சிறுபான்மை இனங்களின் பாரம்பரிய வழிபாட்டுத் தலங்கள் மீதான ஆக்கிரமிப்பு, சிங்களத் திணிப்பு என நாளுக்குநாள் பதற்றம் மலிந்த பூமியாகவே தமிழர் தாயகம் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஏதோவொரு பிரச்சினை மாறிமாறி தோற்றுவிக்கப்படுகின்றது, ஏதோவொரு விவகாரம் மாறிமாறி பேசுபொருள் ஆக்கப்படுகின்றது. மாறாக நீடித்த நிரந்தர அமைதியைத் தமிழர்தாயகம் கண்டு கொள்வதற்கு ஏதுவான நகர்வுகள் பூர்வாங்க அடிப்படையிலேனும் மேற்கொள்ளப்படவில்லை.

பொருளாதாரத்தை இழந்து, தமக்கான அரசியலை இழந்து, தம் தேசத்தைத் துறந்து வாழ்ந்துவரும் தமிழர்கள் இன்று பல்லாயிரம் பேர். இவ்வாறிருக்கையில் ஸ்ரீலங்காவின் சுதந்திரதினம் எவ்வாறு தமிழர் தாயகத்தின் சுதந்திரதினமாகும்? தமிழர்களின் நாட்காட்டிகளில் இன்றென்பது பெப்ரவரி மாதம் நான்காம் நாளே. இது சுதந்திரதினமாக மாறுவதும் அல்லது மாறிமாறி கரிநாளாகக் கடைப்பிடிக்கப்படுவதும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கைகளில்தான் தங்கியுள்ளது. சிறுபான்மை மக்களும் 'ஸ்ரீலங்காவின் மக்களாக' சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு என்று வழியேற்படுத்தப்படுகின்றதோ அன்றுதான் 'கரிநாள்' என்னும் எண்ணப்பாடு தமிழர்களை விட்டகலும்.



# நிகழ்நிலைக் காப்புச் சட்டம் மீள்பரிசீலனை அவசியம்

ஐ.நா. பேரவை மீள வலியுறுத்து

**கொழும்பு, பெப். 4**

**இலங்கையில் நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்புச் சட்டம் மனித உரிமைகள் அம்சங்களில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அதிருப்தி தெரிவித்துள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் தளத்தில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலை காப்புச் சட்டத்தால் கருத்து மற்றும் பேச்சு சுதந்திரத்துக்குத் தடையேற்படும். இந்தச் சட்டத்தின் ஊடாக சிவில் சமூகம், கைத்தொழிற்றுறை உட்பட பல துறைகள் பாதிப்புக்குள்ளாகும். எனவே இந்தப்பாதிப்புகளை மீளாய்வு செய்து சட்டத்தைத் திருத்தம் செய்ய இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்துகிறோம்- என்றுள்ளது. (ச-இ)

## அரசுக்கு அதிகாரமளிக்கும் சட்டங்களே உருவாகின்றன

சந்திரிகா சுட்டிக்காட்டு



ஜனநாயக வழியில் செயற்படும் மக்களைத் துன்புறுத்துவதற்கான அதிகாரங்களை அரசாங்கத்துக்கு வழங்கும் சட்டங்களே நாட்டில் கொண்டு வரப்படுகின்றன. இவை பாரதூரமானவை - ஆபத்தானவை.

அரசாங்கம் கொண்டுவருகின்ற நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு என்பன தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தச் சட்டங்கள் அரசாங்கத்தை விமர்சிக்கின்ற - எதிர்ப்பு தெரிவிக்கின்ற மக்களை துன்புறுத்துவதற்கான அதிகாரங்களை அரசாங்கத்துக்கு வழங்குகின்றன. இந்தச் சட்டங்களை அரசாங்கம் விலக்கிக்கொள்ள வேண்டும்- என்றார். (ச-இ)

## உலக வங்கியால் 150 மில். டொலர்

உலக வங்கி குழுமத்தின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்து 150 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதியைப் பெற்றுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது. இலங்கையின் நிதித் துறையின் வலையமைப்பை வலுப்படுத்த இந்தத் திட்டம் பங்களிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## திருத்தங்கள் செய்யப்பட்டே

**சட்டம் நடைமுறை**

கொழும்பு, பெப். 4

நிகழ்நிலைக் காப்புச்சட்டத்தில் உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டிய பிரிவுகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோகணதீர தெரிவித்துள்ளார். (ச-6)

## ஆயுள்வேத கூட்டுத்தாபனம் 2023 இல் அதிகூடிய இலாபம்

கடந்த 2023 ஆம் ஆண்டில் ஆயுள்வேதக் கூட்டுத்தாபனம் 195 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளது என்று சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

2017ஆம் ஆண்டுக்குப் பின்னர் கிடைத்த அதிகூடிய இலாபமாக இது பதிவாகியுள்ளது.

அதேவேளை நாடளாவிய ரீதியில் பத்து இலட்சம் மூலிகைச் செடிகளை நடும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். (ச-இ)

**நாளை**

05.02.2024

**திங்கட்கிழமை**

**தை – 22**

சுபநேரம் : 12.35 – 02.05

ராகுகாலம் : 08.05 – 09.35

**நாளொரு நல்வார்த்தை**

**திட்டங்கள் என்பதில் எதுவும் இல்லை; திட்டமிடல் என்பதிலேயே எல்லாம் இருக்கின்றது.**

**- ட்வைட் டி ஐசனோவர்–**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டடத் திறப்பு விழா

கொக்குவில், பெப்.4

கொக்குவில் இந்துக் கல்லூரியின் தொழில் நுட்பப் பீடத்திற்கான புதிய கட்டடத் திறப்பு விழா மேற்படி தொழில்நுட்ப பீடவளாகத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. பதில் அதிபர் கே.குமணன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த பிரதம விருந்தினராகவும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-66)


## பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில்
இயங்கி வருகின்ற
வல்வை முதியோர் இல்லத்திற்கு
ஆண், பெண் பராமரிப்பாளர் தேவை.
உணவு, தங்குமிட வசதி இலவசம்.
தகுந்த சம்பளம் பேசித்
தீர்மானிக்கப்படும். (CS 53581) S-1

077 810 6857 | 077 154 2067
021 226 5551 | 075 563 1451

## வேலையாட்கள் தேவை

நல்லூரில் இயங்கும் Ice Cream
நிலையம் ஒன்றிற்கு பின்வரும்
பணியாளர்கள் தேவை.

1. ரோல்ஸ் தயாரிப்பாளர்கள்
2. Ice Cream தயாரிப்பாளர்
3. உணவு பரிமாறுபவர்கள்
4. Order Room இல் கடமை புரிபவர்கள்
5. காசாளர் ( ஆண் / பெண்)

(cs.53828) (N.1)

077 267 2888

## மணமகள் தேவை

யாழ் இந்து, கொழும்பில் வளர்ந்து லண்டனில்
கணக்காளராக பணிவுரியும் ஜாதகத்தில்
குற்றமற்ற 30 வயதுடைய அழகான
மணமகனுக்கு லண்டனில் நிரந்தர
குடியுரிமையுடைய தகுதிவாய்ந்த மணமகளை
பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள்.

(cr.417726) (N.1)

076 632 4005

## வேலையாள் தேவை

யாழ். சுண்டுக்குளியில் இயங்கும்
தங்குமிடம் ஒன்றுக்கு அறை
பராமரிப்பாளர் (Room Boy) தேவை.
சிங்களம் கதைக்கத் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

(cs.28014) (N.1)

077 724 2427, 077 741 2713

## காணி விற்பனைக்கு

கோப்பாய், உரும்பிராய் பிரதான
வீதியில் இருந்து 150m இல்
3 1/2 பரப்புக்காணி, சுற்றுமதில்,
குழாய்க்கிணறு வசதியுடன்
விற்பனைக்குண்டு.

(cs.28001) (N.1)

தொடர்பு: 076 388 8103

## யாழ் KING OF BOYS MUSICAL BAND
பெருமையுடன் வழங்கும்

## யாழ். இசை மகுடம் - 2024
## பாடல் போட்டி

பாடல் போட்டியில் பங்குபற்ற விரும்புகின்ற
போட்டியாளர்கள் எதிர்வரும் பெப்ரவரி 15 ம் திகதிக்கு
முன்னர் உங்களுடைய சுய விபரங்களை

**077 528 5093 Whatsapp**

இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்.

போட்டியாளர்களின் விபரங்கள் பெறப்பட்ட பின்னர் போட்டி
நடைபெறும் இடம், திகதி என்பன
போட்டியாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

- முதலாம் பரிசு 100,000
- இரண்டாம் பரிசு 75,000
- மூன்றாம் பரிசு 50,00

குறிப்பு :
* பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும் எந்தவொரு விபரங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
* வயது எல்லை 16 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பங்குபற்றலாம்.
* நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
* போட்டிக் கட்டணமாக 2000/= அறவிடப்படும்

077 528 5093

Yaal king of boys
யாழ் king of boys musical band

## காணி விற்பனைக்கு

வவுனியா - பண்டாரிகுளம் அம்மன் கோவிலுக்கு அருகில்
8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு


- வீட்டுத் தொகுதிக்கும் - மருத்துவ மனைக்கும் பொருத்தமான இடம்
- புகையிரத நிலையம் - வங்கிகள் - பஸ்டான்ட், மார்கட் என்பன மிக அருகாமையில்.

(Cs 25847) (N.1)

077 362 8995


## மரண அறிவித்தல்

பிறப்பு
02.12.1948



இறப்பு
03.02.2024

### கந்தசாமி சந்திரரெத்தினம்

யாழ். ஆனைக்கோட்டை மூர்த்தவிநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, ஆனைக்கோட்டை வீதியை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி சந்திரரெத்தினம் நேற்று (03.02.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவஞானம் இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற உஷாந்தினி மற்றும் உஷாந்தன், ஜெயரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜா, இராணி, வசந்தநாயகி, நவரத்தினம், சாந்தகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொடர்பு:
076 206 2674 / 077 664 8656

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
31 . 12 . 1942



மறைவு
01 . 02 . 2024

### கந்தசாமித்துரை வள்ளிநாயகி (கிண்ணியம்மா)

வல்வெட்டித்துறை வேம்படியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமித்துரை வள்ளிநாயகி அவர்கள் கடந்த (01.02.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் பர்வதபத்தினி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமித்துரையின் பாசமிகு மனைவியும், பாலேந்திரன் (அருமை), காலஞ்சென்றவர்களான சிறீகரன் (முரளி), ரவீந்திரன் (கிண்ணி) மற்றும் ஈஸ்வரராசா (பிரதிப் பிரதம செயலாளர், பொறியியல் சேவை வடக்கு மாகாணம்), துரைலிங்கம் (துட்டான்), வளர்மதி (ராணி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவனேஸ்வரி, இளம்பிறை, பானுமதி, ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நித்தியானந்தவேல், காலஞ்சென்ற மகாலெட்சுமி மற்றும் பாலசுப்பிரமணியம், சதானந்தவேல், இராஜலெட்சுமி, சண்முகநாதன் (குட்டிப்பாலி), நவலட்சுமி ஆகியோரின் சகோதரியும், வல்லிபுரம் மா[illegible]ரரின் மைத்துனியும், சிறீகரன், சுதாகரன், வானதி, வாகீசன், ரவிகரன், விவேகன், க[illegible]குமரன், கலைக்கதிர் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது வேம்படி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

அருமை (மகன் - 077 841 4450)
ஈசன் (மகன் - 071 321 6996)
துட்டான் (மகன் - 0041 7822 74577)

(IN26589) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் 76 ஆவது சுதந்திரதின நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு முல்லைத்தீவு நகரப் பகுதியைச் சுத்தப் படுத்தும் நடவடிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
சிரமதானத்தில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சித் திணைக்கள உத்தியோகத்தர்கள், கரைதுறைப்பற்று, பிரதேசசபை உத்தியோகத்தர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகள் எனப் பலரும் பங்குபற்றினர். (ப

## சிரமதானம்




# JOIN THE MOST AWARDED BANK IN SRI LANKA



With an enduring vision of being the most technologically advanced, innovative and customer friendly financial organization, we, the Most Awarded Bank in Sri Lanka, continue to progress steadily while being the first Sri Lankan bank to be listed amongst the Top 1000 Banks in the World.

Our unparalleled record of success is supported by an unmatched suite of digital offerings and superior standards in service, stability and performance. We are poised to ascend to even greater heights in the near future.

## Agriculture and Microfinance Business Development Associate
(Fixed Term Contract)

We are looking for highly motivated, enthusiastic and dynamic individuals to be stationed at Northern, Eastern, Central, North Central, North Western, Sabaragamuwa, Uva and Southern Regions.

**Job Profile**

- Generate leads, identify potential clients and introduce them to the assigned branches
- Forming clusters & societies / conducting basic trainings to members / collecting data & submitting to branches
- Build and maintain strong relationships with clients and public sector organizations
- Develop and implement strategies to identify potential farmer groups, community based organizations and link them with the branch
- Preparation of loan evaluations
- Provide assistance to the branch in maintaining a quality loan portfolio

**Applicant's Profile**

- Age should be below 28 years
- Passed G.C.E. Ordinary Level in one sitting, with simple passes for Mathematics and English
- Passed G.C.E. Advanced Level
- Possess an Agriculture Diploma from an institute recognized by the Ministry of Education or have two (02) years of experience in a similar capacity in a licensed financial institution
- Should have a motorbike and a valid driving license

Successful candidates will be provided with an attractive remuneration, commensurate with benchmarked financial institutions.

**Interested candidates are invited to apply for the position, all applications should be routed through our corporate website**

**To apply, please visit,**

www.combank.lk → Careers → Open Positions → Agriculture and Microfinance Business Development Associate

COMMERCIAL BANK




சுன்னாகம் பாரம்பரிய றோட்டறிக் கழகமும் பாணந்துறை றோட்டறிக் கழகமும் இணைந்து 5 துவிச்சக்கரவண்டிகளை சாவகச்சேரி, ஏழாலை, கைதடி, வரணி ஆகிய பிரதேச மாணவர்களுக்கு சாவகச்சேரி மொடோன் மருத்துவமனையில் வைத்து கடந்த திங்கட்கிழமை வழங்கியுள்ளன. இயூகிர்சன் றோட்டறிக் கழகம் ஜேர்மனி, ஸ்ரவுண்ட் றோட்டறிக் கழகம் இலண்டன் ஆகியவற்றின் அனுசரணையுடன் சிறுவர் மற்றும் பெண்கள் சமூக சேவைத் திணைக்களத்துடன் இணைந்து இந்தச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது. (ப-125)

## உற்பத்தியாளர்களுடன் சந்திப்பு

கிளிநொச்சி, பெப்.4

கிளிநொச்சி, அக்கராயன் பிரதேசத்தில் கொடித் தோடை மற்றும் ஜம்போ நிலக்கடலை உற்பத்திச் சங்கத்தினருடனான சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆசியாவுக்கான கண்காணிப்பு அதிகாரி அமீன், நவீனமயமாக்கல் விவசாயத் திட்டப் பணிப்பாளர் விஜிதரன், கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் சூ.கேதீஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-13)



## சடலம் மீட்பு

இரத்தினபுரி, பத்பேரிய வடப்பிட்டிய பிரதேசத்தில் தனியார் காணிஒன்றில் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. தூரியன் பழச்செய்கைக்காக காணியின் உரிமையாளர் அமைத்திருந்த மின்சார வேலியில் சிக்கியே இளைஞர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)


MOBILE SLTMOBITEL
உபஹார
15 ஆம் ஆண்டு பூர்த்தி விழா



எல்லையற்ற அர்ப்பணிப்புடன் சேவையாற்றும்
அரச பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற உங்களுக்காக
பல நன்மைகளுடன் உங்களை மேலும் வலுவூட்டும்
விஷேட குறைந்த கட்டணங்களுடனான பிற்கொடுப்பனவு பெக்கேஜ்கள்

ரூ. 499/- மாதாந்தம்
Anytime DATA 15GB (512MB/நாளாந்தம்) + நிமிடங்கள் மற்றும் SMS 1000 (எந்த வலையமைப்பிற்கும்)
10GB + 7.5GB (256MB/நாளாந்தம்)
இணைப்புக் கட்டணம் ரூ.750/-

ரூ. 727/- மாதாந்தம்
Anytime DATA 30GB (1GB/day) + நிமிடங்கள் மற்றும் SMS 1000 (எந்த வலையமைப்பிற்கும்)
10GB + 7.5GB (256MB/நாளாந்தம்)
இணைப்புக் கட்டணம் ரூ.1,000/-

TRC/M/PRO/24/01

1717
SLTMOBITEL
நிகரற்ற இணைப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புலோலி, பெப்.4

புலோலியில் அமைந்துள்ள கந்த முருகேசனார் சனசமூக நிலையத்துக்கு சுவிஸ் கிளை உறுப்பினரான அமரர் மனோகரன் முருகதாசனின் நினைவாக புளொட் அமைப்பினால் நூலகக் கட்டடத் திருத்தத்துக்கான நிதியுதவி கடந்த சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டது. (பு-125)




கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியால யத்தில் தேசிய கலை இலக்கியப் பேரவை யின் ஏற்பாட்டில் புத்தக அரங்க விழாவின் இரண்டாம் நாள் கடந்த 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ப)

## பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

யாழ்., பெப். 4

அரியாலை காந்தி சனசமூக நிலை யத்தின் ஆண்டிறுதிப் பொதுக்கூட்ட மும் நிர்வாக சபைத் தெரிவும் கடந்த டிசெம்ப ரில் இடம்பெற் றது.

இதில் 75 ஆம் ஆண் டுக்கான (பவள விழா) தலைவ ராக தெ.சுஜீவன், செயலாளராக தி.மயூரன், பொருளா ராக இ.வினோத் ஆகியோருடன் 12 நிர்வாகசபை உறுப்பினர்க ளும் தெரிவு செய்யப்பட்ட னர். (ச)


## வாடகைக்கு

யாழ். கச்சேரிக்கு அண்மையில் வீடு (அனெக்ஸ்) வாடகைக்குண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

077 420 6658

## சர்வதேச திருமணசேவை

உள்நாடு, வெளிநாடு மணமகன், மணமகள் எம்மிடம் உண்டு.

+44 7404 303 185
+94 770 097 607

## தேவை

> வாகன சுத்திகரிப்பாளர்: அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை

> காசாளர்: தகைமை A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது.

கோண்டாவிலுக்கு அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 923 4756
077 788 5157

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தையில் இருந்து 15 நிமிடங்கள் Drving தூரத்தில் 20 Million மட்டும் கொடுத்தால் போதும். மிகுதி வங்கி வசதி செய்து தரப்படும். மிகவும் அழகான மேல் மாடி வீடு Land உடன் 10.7 Perch 2700 சதுர அடியில் மிகவும் அமைதியான சூழலில் முழுவதும் வாஸ்து முறையில் அமைக்கப்பட்ட (வடக்கு வாசல் வீடு)

077 744 4422


## யாழ்/ வைத்தீஸ்வரா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் அறிவித்தல்

12.04.2023ம் திகதியில் உதயன் பத்திரிகையில் எம்மால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் மாணவர் நலன் தவிர்ந்த சங்க செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. எனினும் கல்லூரி சமூகம், பழைய மாணவர் சங்கங்கள் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் கல்லூரியின் நலன் சார்ந்த கோரிக்கையை ஏற்று இவ்விடயம் தொடர்பாக 28.01.2024 அன்று கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற விசேட நிர்வாகசபைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டு கல்லூரியின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு தாய்ச் சங்கச் செயற்பாடுகளை மீளவும் முழுமையாக இயங்குவதென ஏகமனதாக தீர்மானிக்கப் பட்டது என்பதனை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

நன்றி

செயலாளர்
இ.கிருஷ்ணகுமார்
பழைய மாணவர் சங்கம்
யாழ்/வைத்தீஸ்வரா கல்லூரி.

(CR 53848) V-1


## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும்.
(இழுத்து பதிக்க ஒரு சதுர அடி 100.00 ரூபாய்)

077 334 1281

## காணி விற்பனைக்கு

கல்வியங்காட்டு சந்தைக்கு மிக அருகாமையில் 1 1/4 பரப்பளவு கொண்ட செவ்வக காணி விற்பனைக்கு. சுப்பர் மார்க்கெட் கட்டுவதற்கு மிகவும் உகந்தது. தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.

தொடர்புகளுக்கு: 076 879 3951

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா? ➤பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை

இந்த எண்ணெயைப்பாவித்து பயனடைய

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?


**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 11 . 1941



மறைவு 02 . 02 . 2024

### கந்தசாமி இராஜகோபாலசிங்கம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இரத்தினபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இராஜகோபாலசிங்கம் அவர்கள் கடந்த (02.02.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி செல்லம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும், சத்தியபாமாவின் அன்புச் சகோதரனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், மதன் (சிறி), ரஜனி, ஜெயசீலன், ஜெகன், ஜெயதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருட்சிவம், சுகந்தினி, தீபா, சத்தியவாணி, ஜமுனா ஆகியோரின் அன்பு மாமனாரும், தட்ஷாயினி, விதுஷா, விஷிகரன், புவித்தா, டிலக்ஸ்சனா, கனிமதி, சேருஜா, மிதுரன், கிருஷன், டாமினி, ரேனுசன், ரேனுஷா, சோபியன், வர்ணன், ஜெனாத்தன், ஜெஸ்ரோன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெரினாவின் அன்புமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 259 1869
076 873 6949

இல.1679,
இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

(CS 53852) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞன் கைது

யாழ்ப்பாணம், பெப்.4

யாழ். மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவால் 150 மில்லிகிராம் ஹெரோயினுடன் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபருக்கெதிராக யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப-125)

## கோடா மீட்பு

யாழ்ப்பாணம், பெப்.4

150 லீற்றர் கோடா உரும்பிராய் வாழைத்தோட்டப் பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக சந்தேகநபர் எவரும் கைது செய்யப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ப-125)


## மரண அறிவித்தல்

### திருமதி இராமசாமி சறோஜினிதேவி



பிறப்பு 25.11.1944 இறப்பு 02.02.2024

யாழ். கோண்டாவில் நெட்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் நாவலப்பிட்டி கோண்டாவில் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட இராமசாமி சறோஜினிதேவி கடந்த (02.02.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இராசம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு - பாக்கியம் தம்பதியரின் மருமகளும், மகாலிங்கத்தின் பாசமிகு சகோதரியும், கமலராணி, தர்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பத்மராசா காலஞ்சென்ற செல்வநேசன் ஆகியோரின் மாமியாரும், ரேவதி சந்திராவின் மைத்துனியும், சுக்விந்ர, பிரியாலினி, பகீரதனின் அத்தையும், சயந்தன்- திவ்யா, சுபாஸ்கரன் - சாதனா, சகிலன் - சாங்கீதா, லக்ஷன் - பிருந்தா, லவன், கஜாணன், அபிஸன், அயினேஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், இனியா, நேத்ரா, ஸ்ரீவர்ணி, அக்ஷரா, இனியவன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.02.2024) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நெட்டிலிப்பாய்,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 28041)A-1



## வீட்டுக்கிருத்திய அழைப்பு

### மாணிக்கன் அன்னலட்சுமி



பிறப்பு 12.10.1944 இறப்பு 03.01.2024

அம்மா
இறைவக்கு நிகர் நீங்கள் தான் அம்மா
அன்புக்கு நிகர் நீங்கள் தான் அம்மா
பண்புக்கு நிகர் நீங்கள் தான் அம்மா
மண்ணின் விழிவிற்காய் வீரப் புதல்வனை
வித்திட்ட வீரத் தாய் அம்மா
எல்லோர் மனதிலும் நீங்கா இடம் பிடித்த
எங்கள் அன்புத் தாய் அம்மா
என்றும் எங்கள் மனதில் நிலைத்து
இருப்பாய் அம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நீங்கள் தினம் உச்சரிக்கும்
முருகப் பெருமானை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தாயாரின் அந்தியேட்டி கிரியை 02.02.2024 கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெற்றது.

வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (04.02.2024) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து தாயாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆவரங்கால் கிழக்கு,**
**புத்தூர்.**

**குடும்பத்தினர்.**

(CS 28040)A-1



## மரண அறிவித்தல்



பிறப்பு 10.04.1947 இறப்பு 02.02.2024

### செபமாலை யேசுதாசன் (கிளி)

மண்டைதீவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை யேசுதாசன் (கிளி) கடந்த (02.02.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம் செபமாலை (தங்கத்துரை) - அடைக்கலமுத்து (பச்சைக்கிளி) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பிரான்சிஸ் மற்றும் பொன்மணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், மேரி விக்ரோரியா வின் (இரத்தினமலர்) அன்புக் கணவரும், இயேசுமலர் சுசி (பெல்ஜியம்), இருதயமலர் சுகிர்தா, அன்ரனிஜெனிதாஸ் (ஜெனி), அன்ரனி கனிராச் (கனி), காணாமல் ஆக்கப்பட்ட விஜியராஜ் (விஜி) மற்றும் விஜியமலர் (விஜிதா) (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான ராசிங்கம், துரைமணி மற்றும் ராணி, ராசு, தங்கராணி (சமாதான நீதவான்) காலஞ்சென்றவரான அமலன் மற்றும் பவளம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மரியதாசின் உடன்பிறவா சகோதரனும் வின்சலாஸ், சந்திர குமார், சந்திரவதனா, அருணா, மைக்கல் (பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நேசராணி, சின்னக்கிளி, ஆரோக்கியராசா, மல்லிகா, சின்ன ராசா, வபாச்சி (லண்டன்), வவா, செபஸ்ரியாம்பிள்ளை, செல்வம் காலஞ்சென்ற பவளம் மற்றும் றாஜன், ராஜி (இந்தியா), காலஞ்சென்ற செல்லி ஆகியோரின் அன்பு மைத்துனரும், விமலா காலஞ்சென்ற அசோக் மற்றும் கிளேறா பாஸ்கரன் (இந்தியா), கொலிபின் ஆகியோரின் அன்புச் சகலனும், காலஞ்சென்ற விஜேதரன் மற்றும் வினோஜன் (பெல்ஜியம்), விதுசன் (பெல்ஜியம்), அனோஜன் (பெல்ஜியம்), அனோஜா (பெல்ஜியம்), சானுஜா, வினோஜா, விஜிதரன், ஜெசிதா, ஜெதுர்சன் (லண்டன்), ஜென்சன், எரிக் எனோமி, கனிஸ், மது (கொழும்பு), கெவின் (கொழும்பு), அபிசன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.02.2024) திங்கட்கிழமை மாலை 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, மண்டைதீவு புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**முதலாம் வட்டாரம்,**
**மண்டைதீவு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 53655) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜ பெருமாள் போற்றி



01 இற்றைக்கு அறுநூறு ஆண்டுக்கு முன் 'நல்லான்' எனும் ஆத்மா
பலா மரத்தடியில் வைத்து பால் வார்த்த விக்கிரகம் இன்று
கர்ப்ப கிரகத்தில் ஸ்ரீதேவி பூதேவி சமேதராய் நகருக்கு மத்தியில்
வண்ணை ஸ்ரீ வெங்கடேசனானவனே போற்றி

02 அறுநூறு ஆண்டு வரலாறு- ஆயிரத்திமுந்நூறில் 'நல்லான்' ஆரம்பிக்க
ஆயிரத்து அறுநூறில் போர்த்துக்கேயர் அழித்தாலும்
ஆயிரத்து எழுநூற்றில் ஒல்லாந்தர் வருகை எமக்கு ஒத்தாசை செய்ய
'நல்லான்' வழி வந்த பண்டாரவாளர் பணியை ஏற்ற பரந்தாமனே போற்றி

03 அன்று வந்த போர்த்துகேயருக்கு விக்கிரகம் கல்லாக தெரிய
காலால் உதைத்து இம் மண்ணில் தம் காலத்தை காலாவதியாக்கிட
பின் வந்தவர் ஒல்லாந்தர் பிழையேதும் செய்யாததன் பயன்
பண்டாரவாள் செட்டிபிள்ளைகளின் பணியை ஏற்ற பரந்தாமனே போற்றி

04 அறுநூறு ஆண்டு சென்றும் - இன்றும் நிற்கும் பலாமரம் சாட்சி
அதன் கீழ் அமர்ந்திருக்கும் லஷ்மிதேவியின் கருணை
கலங்கரை விளக்காய் காலமெல்லாம் முழுமதியாய் கருணை காட்டிட
வண்ணை ஸ்ரீவெங்கடேசனாய் நிற்கும் பரந்தாமனே போற்றி

05 ஆயிரத்து எண்ணூற்று நாற்பதில் மூலஸ்தானம், லஷ்மி கோவில் உருவாக
ஆயிரத்து எண்ணூற்று எழுபத்து எட்டில் கொடி ஏற்றம் வான் உயர
ஆயிரத்து எண்ணூற்று எண்பதில் கும்பாபிஷேகத்துடன் கட்டிடங்கள் களைகட்ட
ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபதில் சித்திரத்தேர் ஏறி சிந்தையில் குடிகொண்டவனே போற்றி

06 தொள்ளாயிரத்து எழுபத்து ஒன்றில் மணிக்கோபுரங்கள் நகருக்கு ஒலி எழுப்ப
தொள்ளாயிரத்து எழுபத்து எட்டில் ராஜகோபுரம் கும்பாபிஷேகம் காண
இரண்டாயிரத்து மூன்றில் ஸ்ரீ ரெங்கநாதர் கும்பாபிஷேகம் கண்டு நகர மாந்தர்
'கோவிந்தா, கோவிந்தா' என கோஷம் இட வைத்தவனே போற்றி

07 பண்டாரவாள் செட்டியார் பூர்வீகம் இந்திய மண் - அவர்
வைஷ்யரும் வைஷ்ணவரும் மார்க்கண்டேய கோத்திரம் ஆனதால்
சைவமும் வைஷ்ணவ சித்தாந்தமும் கைகொடுக்க
குல தெய்வமாகிய ஸ்ரீ வண்ணை வெங்கடேசனே போற்றி

08 பூர்வீக தொழில் நூலை ஆடையாக்குவதில் வல்லுனர்
பரந்தாமன் ஆபத்துக்கு ஆடை சுரந்த கதை பார் அறிந்ததே
பண்டாரவாளரும் ஆடை அழிப்பதனால் என்னவோ
பார் அறிய யாழ் மண்ணிற்கு பெருமை சேர்க்க
ஈழத்து திருப்பதி ஆனவனே போற்றி

09 சீதைக்கு இராமனாய் ராதைக்கு கண்ணனாய்
கோபியருக்கு வெண்ணை திருடுபவனுமாய் கோபருக்கு இடையனுமாய்
ஆண்டாளுக்கு மணாளனாய் , அர்ச்சுனனுக்கு சாரதியாய்
பாரில் வந்துதித்த பரந்தாமனே போற்றி.

10 நான்கு சுவர்களுக்கு நடுவில் நள்ளிரவில் அவதரித்தாய்
தாய்மாமன் கம்சனுக்கு காலனாய் யசோதைக்கு குழந்தையாய்
வசுதேவருக்கும் தேவகிக்கும் சிறைமத்தியில் சிசுவானாய்
அவதாரமே லீலையானதால் சிறை கடந்து கோகுலவாசியானவனே போற்றி

11 கோவர்த்தன மலையை கண்ணன் குடையாய் உயர்த்தியது கோவர்த்தன லீலை
வெண்ணை திருடி உரலின் கட்டுண்டது தாமோதர லீலை
மரங்கள் மத்தியில் உரல் விடுபட மணிக்கிரீவன்
நளக்குபேரன் தோன்றியது நாரதர் பாபவிமோசன லீலை
அவதாரத்தையே லீலையாக்கிய பரந்தாமனே போற்றி

12 வானில் இருந்து ஒளியாய் உள்வந்துதித்து கிருஷ்ண அவதாரமானாய்
மண்ணில் குறுமுனியாக வந்து விண்ணை தொட்டு வாமன அவதாரமானாய்
வாமனனாக வந்தும் கூட மூவுலகையும் அளந்ததால் திரிவிக்கிரம அவதாரமானாய்
அவதாரங்களுக்கு மூலமாய் பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமனே போற்றி

13 பக்தனுடைய பக்திக்கு இலக்கணம் இதுவென நரசிம்ம அவதாரம்
பகவத்கீதையின் தர்மத்தை நிலைநாட்ட மகாபாரத யுத்தம்
பாமரர் படித்து பரமன் அடி எய்த மகாபாரதம், இராமாயணம்
யாழ். நகர் காவலுக்கென்றே வண்ணை ஸ்ரீ வெங்கடேசனானவனே போற்றி

14 விண்ணில் இருந்து உதித்து தேவகிக்கு சிசுவானாய்
மண்ணை உண்டு யசோதைக்கு மண்ணும், விண்ணும் நீயே என்றாய்
இம் மண்ணில் மூன்று காலடி கேட்டு மூன்று உலகங்களையும் அளந்தவனும் நீயே
நீயே எமக்காக யாழ். நகரில் பள்ளி கொண்ட வண்ணை ஸ்ரீ வெங்கடேசனே போற்றி.

15 ஆயிரம் தலை காளியனை யமுனையிலிருந்து விரட்ட காளிய நர்த்தனம் ஆடினாய்.
தூணைப் பிளந்துதித்து நரசிம்ம அவதாரமானாய்
சத்திரிய அரசர்கள் தலையைத் துண்டித்து பரசுராம அவதாரமானாய்
யாழ். மண்ணில் எமக்காக வெங்கடேசனாக வந்துதித்தவனே போற்றி.

16 மண்ணை உண்டு வாயில் மண்ணையும் விண்ணையும் காட்டினாய்.
கடல் தாண்ட கல்லின் மேல் 'ராம நாமம்' எழுத வைத்தாய்
நீரினுள் முதலை யானையின் காலை இழுக்க யானை
விண்ணை நோக்கி -ஆதிமூலமே என்று அலற
விண்ணில் கருடன் மேல் உதித்து யானைக்கும் முக்தி,
முதலைக்கும் முக்தி அளித்தவனே போற்றி

17 கடல் மத்தியில் துவாரகா புரியை அமைக்க பணித்தவனும் நீயே
ஆயிரம் தலை காளியனை யமுனையிலிருந்து விரட்டியவனும் நீயே
கம்சனையும் சக அசுரர்களையும் அழித்தவனும் நீயே
பாஞ்ச சன்னியத்தை முழங்கி பாரதப் போரை பார் அறிய செய்தவனும் நீயே.

18 மந்தார மலையை பாற்கடலில் முதுகில் தாங்க கூர்ம அவதாரமானாய்
வேதங்களை காப்பாற்றி கரையேற்ற மீன் அவதாரமானாய்
இரண்ணியாட்சகனிடம் இருந்து பூமியை மீட்க வராக அவதாரமானாய்
அவதாரங்களுக்கே மூலமாய் பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமனே போற்றி.

19 இரண்ணியாட்சகன் பூமியை கடல் அடியில் ஒழித்ததால்இரண்ணியாட்ச வதம்
இரண்ணியாட்சகன் உடன்பிறப்பு இரண்ணிய கசிப்பு தன்
மகனை வதைத்ததால் இரண்ணிய கசிப்பு வதம்
கிருஷ்ணருக்கு அரக்கி - பூதனா முலைப்பால் ஊட்டியதால்பூதனா வதம்
வதம் அனைத்தையும் கம்பர் ஒரு வாக்கியத்தில்
அழகிலா விளையாட்டுடையானிடம் சரண் அடை - என அறிவுறுத்துவது எமக்கு வரம்.

20 பாற்கடலில் பள்ளிகொள்வதால் பரந்தாமன்
நாபியிலிருந்து நான்முகனை தோற்றுவித்ததால் பத்மநாபன்
நான்முகனை நாபியின் தாமரையில் அமர்த்தியதாலும் பத்மநாபன்
பரந்தாமனான நீ அர்ச்ச அவதாரமாய் வண்ணை ஸ்ரீ வெங்கடேசனானவனே போற்றி.

21 உலகில் உயிர்களை தோற்றுவிக்க பிரம்மாவைதோற்றுவித்தவனும் பத்மநாபன்
உயிர்களை உய்விக்க தன்னை அர்ப்பணித்தவனும் பத்மநாபன்
உலக யுகங்கள் முடிவில் தன் நாபியுள் உள்வாங்குவனும் பத்மநாபன்
பத்மநாபனான நீ அர்ச்ச அவதார வெங்கடேசனாக வீற்றிருப்பவனே போற்றி.

22 ஸ்ரீ வைகுண்டத்தில் வீற்றிருக்கும் பரமனை 'பரம்' என்கிறது உபநிஷத்
திருப்பாற் கடலில் வீற்றிருக்கும் பரமனை 'வ்யூஹம்' என்கிறது
இராமர் ஆக கிருஷ்ணர் ஆக அவதரிக்கும் போது பரமனை 'விபவம்' என்கிறது
எல்லா உயிர்களிலும் ஆத்மாவாகும் போது 'அந்தர்யாமி' என்கிறது
எமக்கு விக்கிரகங்களாக காட்சி தரும் போது 'அர்ச்சாவதாரம் என்கிறது
எல்லாமாகவும் ஒரே நேரத்தில் ஒன்றாகவும் பலவாகவும்
இருப்பது 'பரமனே' என்கிறது உபநிஷத்.

23 பரவாசுதேவனை உபநிஷத் இதம் பூர்ணம், அதபூர்ணம், பூர்ணாத் பூர்ணமுச்யதே என்கிறது
பரவாசுதேவனே ஆத்மாவாக ஒவ்வொரு உயிரிலும் இருப்பது - இதம் பூர்ணம்
பரவாசுதேவனே ஸ்ரீவைகுண்டத்தில் ஆத்மாக்களின் அழைப்புக்காக காத்திருப்பது- அதபூர்ணம்
பரவாசுதேவனே திருப்பாற்கடலில் தேவர்களின் தேவைக்காகவும்
காத்திருப்பதால் பூர்ணம் என்கிறது உபநிஷத்!

24 யசோதை தன்குழந்தையாகவே கிருஷ்ணரை கொண்டாடியது வாற்சல்ய பக்தி
கோபியரும் அர்ச்சுனனும் தம் சகபாடியாக கிருஷ்ணரை கொண்டாடியது சாக்கிய பக்தி
ருக்மிணியும் ஆண்டாளும் தம் கணவனாகவே கிருஷ்ணரை கொண்டாடியது மாதுரிய பக்தி
பரதனும் ஹனுமனும் தாம் என்றும் கிருஷ்ணருக்கு சேவகனாகக் கொண்டது தாஸ்ய பக்தி
குழந்தையாய் , தோழனாய், கணவனாய், சேவகனாய்
பக்தி கொள்ள நீ ஒருவனைத் தவிர வேறு ஒருவர்
இலர் என்பதை காட்டிய வெங்கடேசனே போற்றி.

25 கோபியர் குழாம் கோகுலத்தில் கண்ணனை ஆராதித்ததை அறிந்த ஆண்டாள்
அதிகாலை தோறும் தன் தோழியருடன் பாசுரத்தால் கண்ணனை ஆராதிக்க
ஆராதனை அத்தனையும் பாமாலையாகக் கண்ணனை சேர
ஆண்டாளை பெருமாளே ஆட்கொண்டதால் சூடிக்கொடுத்த சுடர்கொடியாள்வனே போற்றி.

26 கோபியரின் முக்திக்கு மூலமாய் அமைந்தது காற்றினிலே எழுப்பிய குழல் இசை
மூங்கிலில் வண்டுகள் துளையிட இயற்கை காற்று அதனூடே ஒலி எழுப்ப
மூங்கில் குழலை கோபாலகிருஷ்ணன் இசைக்க அது அங்காம்போதி - ராகமாக எழ
மூங்கில் புல்லானை குழலை அஸ்திரமாக்கி அடியார்களை ஈடேற்றும் பரந்தாமனே போற்றி

27 ஆல் இலையில் கால்விரல் சுவைக்கும் கண்ணனாய்
அத்திவரதராய் காஞ்சிபுரத்தில் நாற்பது வருடம் குளத்து நீருக்குள் சயனமாய்
ஆபத்தில் ஆதி மூலமே என்று அலறிய கஜேந்திர யானைக்கு அபயமாய்
இருப்பவன் நீ - இலங்கை மண்ணிற்கு
வெங்கடேச பெருமாளாக வந்தவனே போற்றி.

28 ஆயிரம் ஆயிரம் ஆலயங்கள் அகிலத்தில் அதில் 108 திவ்ய தேசங்கள்
ஆயினும் இறுதி இரண்டில் ஒன்று திருப்பாற்கடல் இறுதி ஒன்று வைகுந்தம்
அதுவே பூவுலகிலும் உழன்று பிழன்று அடைய வேண்டிய தேசம் என
திருப்பாவை வழியே வாழ்ந்து காட்டிய ஆண்டாள் நாச்சியாரே போற்றி போற்றி.

29 இராமரின் கால் தூசி பட்டதும் கல்லாக இருந்த
அகலிகைக்கு பாபவிமோசனம்
இராமர் இன்று வருவார் என்று பதின்னான்கு வருடம்
பணிசெய்து காத்திருந்த சபரிக்கு முக்தி
இராம நாமத்தை குரங்கு கூட்டம் ஜபித்தால் இறக்கைகள்
தழைக்கும் என 'சம்பாதி' யின் சத்திய வாக்கு
இராம நாம ஜபம் ஒலிக்க சத்தியமும் பலிக்க குரங்கில்
ஒன்றிற்கு கிடைத்த கடாட்சம் 'ராமபக்த ஹனுமன்'.

30 ராம பக்த ஹனுமன் எழுதிய 'ராமநாமம்' கடலில் கல்லை மிதக்க வைத்தது
'ராம நாமம்' கடல் கடக்க உதவியது - சம்சார கடல்
கடக்கவும் ராம நாமம் என்பதை உணர்த்தியது.
ராமர் தான் 'ராம நாமம்' எழுதி போட்ட கல்
கடலில் தாழ்ந்தது - ராமர் ஏன் என்று வினவ,
நீங்கள் கைவிட்ட பின் சம்சார கடலில் தாழாமல்
இருக்க ஏது வழி என்பதை உணர்த்தியது.

31 நாரதர் வால்மீகி முனிவருக்கு கொடுத்த ஒரே மந்திரம் ராமநாமம்
வால்மீகி இராமாயணம் படைக்க வழி வகுத்ததும் ராம நாம ஜபம்
பால் மணம் மாறாத பச்சிளம் துருவன் தன் தாய் துயர் நீக்க
காட்டில் தவம் இருந்து உச்சரித்தது நாம ஜபம்
பச்சிளம் சிறுவன் பிரகலாதன் தந்தையின் நித்திய
கொடுமையில் இருந்து தப்ப வைத்ததும் நாம ஜபம்

32 இராமானுஜர் தன் குருவிடம் பெற்ற உபதேச மந்திரம் நாம ஜபம்
இராமானுஜர் திருக்கோட்டியூர் கோபுரம் ஏறி உலகுக்கு கொடுத்தது நாம ஜபம்
குலசேகர ஆழ்வார் அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தது நாம ஜபம்
சங்கராச்சாரியார் இறுதியாக சொல்லியது பஜகோவிந்தம்
பஜகோவிந்தம் கோவிந்தம் பஜ மூடமதே.

33 வியாசமகரிஷியின் ஐந்தாவது வேதம் - ஸ்ரீமத்பாகவதம் - இறுதி ஸ்லோகம் நாம ஜபம்
வியாசமகரிஷியின் இறுதி அறிவுரை சர்வஜன்ம பாப
விமோசனத்திற்கும் நாமஜபம் [ஸ்ரீமத்பாகவதம்- 12.13.23]
பகவத்கீதையில் கிருஷ்ணர் மேலும் எளிதாக சொல்லியது
உனது தவங்களை எனக்கு நிவேதனமாக்குவாயாக [பகவத்கீதை- 9.27]
எல்லா மந்திரங்களும் இறுதியில்
நாராயணாயேதி சமர்ப்பயாமி என்றே நிறைவு பெறுகிறது.

34 துளசியின் மகிமை உலகறிய துளசி விருந்தாதேவியாக பூஜிக்கப்பட்டாள்
விருந்தாதேவியே விருந்தா வன - துளசி பூந்தோட்டமுமானாள்
குழல் இசைக்கும் கண்ணன் குடிகொள்ளும் இடமுமானாள்
கோபியர் குடியிருக்கும் கூடாரமும் ஆனவளே விருந்தாதேவி.

35 துலாபாரத்தை நிறைவேற்றி துளசியின் மகிமையை உணர்த்தியவனும் நீ
நரகாசுரன் பெற்ற வரமே அவனுக்கு ஆயுதம் ஆவதற்கு
சத்தியபாமாவை ஆயுதம் ஆக்கியவனும் நீ
இரண்ணிய கசிப்பு கேட்ட வரங்கள் அத்தனையும் அவனுக்கு
அழித்து அவனை அழிக்க வழி வகுத்தவனும் நீ
இராவணன் வரங்கள் ஏதும் அவனை மீட்கவில்லை
என்பதை இராமாயணம் வழியே அறிய செய்த
பரந்தாமனே போற்றி போற்றி.

கிருஷ்ணசாமி ஜயநாதன்
076 636 0860

ஜபம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## தமிழர்...

இலங்கையின் 76 ஆவது சுதந்திர நாள்
கொண்டாட்டங்கள் கொழும்பு காலிமுகத்
திடலில் இன்று நடைபெறவுள்ளன.
அதேநேரத்தில் தமிழ் மக்களின் பூர்வீ
தேசமான வடக்கு - கிழக்கில் 4 கோரிக்
கைகளை முன்வைத்து கரிநாள் கடை
பிடிக்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் எ
பதை ஏற்றுக்கொள்ளவேண்டும் எ
தோடு, தமிழர் தாயகத்தின் மீதான தி
மிட்ட சிங்கள - பௌத்த குடியேற்றங்க
உள்ளிட்ட ஆக்கிரமிப்புகள் உடனடியா
நிறுத்தப்பட்டு தமிழர் தாயகத்தின் நில
ஒருமைப்பாடு பாதுகாக்கப்படவேண்டும்.
குறிப்பாக தற்போது கையறு நிலையில்
உள்ள கிழக்கு மாகாணம் மீதான ஆக்
ரமிப்புகள் தாமதமேதுமின்றி முடிவுக்கு
கொண்டு வரப்படவும் வேண்டும்.

ஈழத்தமிழர்கள் தங்களைத் தாங்களே
ஆள்வதற்கும் வழிநடத்துவதற்கும் சுய
நிர்ணய உரிமை உடையவர்களாவர்
என்பதை ஏற்று ஈழத்தமிழ் மக்களின்
சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்
படவேண்டும்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு
தொடர்பான முயற்சிகள் யாவும் திம்புக்
கோட்பாட்டை அடியொற்றியே முன்னெ
டுக்கப்படவேண்டும். சிறிலங்கா ஒற்றை
யாட்சி அரசமைப்புக்குட்பட்ட பதின்மூன்
றாம் திருத்தத்தை முற்றாக நிராகரிக்கின்
றோம்.

தமிழர் தாயகத்தில் முடிவுற்றுத் தொடரும்
திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள்,
இராணுவப் பிரசன்னம், சிங்கள -
பௌத்தமயமாக்கல், வலிந்து காணா
மல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி,
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை
போன்றவற்றுக்கான உரிய தீர்வுகள்
தாமதமேதுமின்றி வழங்கப்படவேண்டும்
என்பதோடு, ஆக்கிரமிப்புகளை முன்
னின்று நடத்தும் அரச இயந்திரத்தையும்
அதன் நிறுவனங்களையும் கண்டிக்
கின்றோம் என்ற 4 கோரிக்கைகளுடன்
இன்றைய கரிநாள் போராட்டம் கடைப்பி
டிக்கப்படவுள்ளது.

டக்கு மாகாணத்துக்கான போராட்டம்
ரிநொச்சி, இரணைமடுச் சந்தியிலி
து மு.ப. 11 மணிக்கு ஆரம்பமாகி,
போச் சந்தி வரை நடைபெறும்.

க்கு மாகாணத்துக்கான போராட்டம்
டக்களப்பு கல்லடிப் பாலத்திலிருந்து
ப. 10 மணிக்கு ஆரம்பமாகி, காந்தி
ங்கா வரையில் நடைபெறும்.

(அ-ஓ-5-125)

## கரிநாள்...

து தொடர்பில் அவர் விடுத்துள்ள
ஊடக அறிக்கையில்; 1619ஆம் ஆண்டு
போர்த்துக்கேயரிடம் யாழ்ப்பாண
இராஜ்ஜியம் வீழ்ச்சியடைந்ததிலிருந்து
இன்று வரை ஈழத் தீவிலுள்ள தமிழ் மக்
கள் தங்கள் சுதந்திரத்துக்காகப் போராடி
வருகின்றார்கள். 405 ஆண்டுகளாகி
யும் தமிழ் மக்கள் இழந்த இறைமையை
இதுவரையில் மீட்கமுடியவில்லை. தமி
ழீழ தனியரசுக்கான ஆயுதப் போராட்டம்
முனைப்புப்பெற்றபோது, இறைமை
மீட்கப்படும் என்று தமிழ் மக்கள் முழுமை
யாக நம்பினார்கள். அந்தப் போராட்டம்
பல்வேறு சதிகளால் வீழ்த்தப்பட்ட பின்ன
ரான கடந்த 14 ஆண்டுகளில் இறை
மையை மீட்பதற்கான நம்பிக்கையான
நகர்வுகள் எதுவும் தெரியவில்லை.

இலங்கையானது பிரிட்டிஷாரிடமிருந்து
சுதந்திரம் பெற்றதாகச் சொல்லி தனது
76ஆவது சுதந்திர நாளைக் கொண்டா
டுகின்றது. சிங்கள தேசம் அதை பெரு
வெற்றி நாளாகக் கருதுகிறது. ஆனால்,
தமிழர் தேசம் அந்த நாளைக் கரிநாளாக
அறிவித்து சுதந்திரம் இன்னமும் கிடைக்
கவில்லை என்பதை முரசறைவதற்காகப்
போராடுகின்றது.

இந்த நாடு பிளவடைந்து இருக்கின்றது
என்பதைச் சொல்லாமல் சொல்லி நிற்
கும் செய்தியாக இந்தக் கரிநாள் போராட்
டம் அமைந்திருக்கின்றது. தமிழர் தேசம்
ஓரணியாக - பெருந்திரளாக இந்தப்
போராட்டத்தில் பங்கேற்பதன் மூலமே,
தமிழர் தேசத்தின் சுதந்திரவேட்கை இன்
னமும் ஓயவில்லை என்ற செய்தி ஓங்கி
உரைக்கப்படும். அதுவே எமது இறை
மையை மீட்பதற்கான போராட்டப்பா
தைக்கு உத்வேகமாக அமையும்.
எனவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
மாணவர்களின் கரிநாள் போராட்டப் பேர
ணிக்கு நாம் அணிசேர்ப்போம் - என்
றுள்ளது.

(அ-ஓ-5)

## போராட்டங்களுக்கு...

பெறப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் கல்
லடி பாலத்திலிருந்து காந்தி பூங்கா வரை
யில் பேரணி நடத்தப்படவிருந்த நிலை
யில் 17 பேருக்கு எதிராக மட்டக்களப்பு
நீதிவான் நீதிமன்றில் தடையுத்தரவு
பெறப்பட்டு நேற்று இரவு 10.30 மணிய
ளவில் சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்ப
டைக்கப்பட்டது.

இதேவேளை - யாழ். மாவட்டத்தில் 9
பேருக்கு எதிராக தடையுத்தரவு கோரி
பதில் நீதிவான் தவபாலனின் இல்லத்
துக்கு நேற்றிரவு பொலிஸார் சென்றனர்.
அடிப்படை உரிமைகளின்படி, பொதுமக்
களுக்கு போராட்டம் நடத்த உரிமை
உண்டு. போராட்டக்காரர்கள் சாலை
மறியல் செய்தால், பொலிஸ் அதிகாரி
கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என
வும் பதில் நீதிவான் உத்தரவிட்டார். குற்
றம் நிகழும் முன் தடை உத்தரவுகளை
பிறப்பிக்க நீதிமன்றத்துக்கு அதிகாரம்
இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டி
னார்.

(அ-ஓ-125)

## ஓரணியாகப்...

செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்
துள்ளார்.

மன்னாரில் நேற்று இடம்பெற்ற செய்தி
யாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்ட
வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்
ததாவது:-

ஐந்து தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து
ஓரணியில் குத்துவிளக்குச் சின்னத்தில்
பயணித்துக் கொண்டிருக்கிறோம். ஏற்க
னவே நாங்கள் தமிழரசுக் கட்சியின்
தனிச் சின்னத்தில் தமிழ்த் தேசியக் கூட்
டமைப்பு என்ற பெயரில் பல வருடங்களா
கப் பயணித்தோம்.

உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப்
போட்டியிடவேண்டும் என்று அவர்கள்
வெளியில் சென்றதால் நாங்கள் ஒன்றி
ணைந்து செயற்படுகின்றோம். எங்க
ளைப் பொறுத்தவரையில் அனைவரும்
பொதுச் சின்னத்தில் பயணிக்கவேண்
டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும்
இல்லை.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறீ
தரனின் கூற்றை நான் வரவேற்கின்
றேன். பொதுச் சின்னத்தில் நாங்கள்
அனைவரும் அணிதிரள்வோம். பொதுச்
சின்னமாக வீட்டுச் சின்னம் இருந்
தால்கூட எங்களுக்கு ஆட்சேபனை
இல்லை.

பொதுச் சின்னத்தில் நாங்கள் ஒன்றி
ணைந்து செயற்படுவதற்கு எந்தவித
மான விட்டுக்கொடுப்புக்கும் தயார் - என்
றார்.

(அ-ஓ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலித் திருமணம் மூலம் சட்டவிரோதக் குடியேற்றம்!

## ஐரோப்பியப் பொலிஸாரால் 15 பேர் கைது

போலித் திருமணங்கள்மூலம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் சட்டவிரோதமாக ஆள்களைக் குடியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த குழுவை ஐரோப்பிய ஒன்றியப் பொலிஸார் சைப்ரசில் கைது செய்துள்ளனர்.

இந்தியர்கள், பாகிஸ்தானியர்கள் உட்பட 15 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று ஐரோப்பிய ஒன்றியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தக் குழுவினர் ஆள்கடத்தலிலும் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வந்துள்ளமையும் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் சட்டவிரோத குடியேற்ற நோக்கங்களுக்காக போலியாகத் திருமணம் செய்துகொள்ள வெளிநாடுகளில் இருந்து அழைத்து வந்த நபர்களை கட்டாயப்படுத்தியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

லத்வியா, நெதர்லாந்து நாடுகளைச் சேர்ந்த பெண்களை சைப்ரசுக்கு அனுப்பி வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களுக்குத் திருமணம் செய்து வைத்துள்ளனர் என ஐரோப்பிய ஒன்றியப் பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு 133 போலித் திருமணங்களை செய்து வைத்துள்ளமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ-இ)

### விபத்தில்...

ளான். கடந்த 31ஆம் திகதி சிலாவத்துறையில், மோட்டார் சைக்கிளில் மாணவன் பயணித்தபோது, எதிரே வந்த கடற்படை வாகனம் திடீரென வலப்பக்கம் திரும்பியதால் விபத்தில் சிக்கினான். படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்துள்ளான்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஓ-26)

### 21 பவுண்...

கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாய்பேச முடியாத பெண்ணிடம் 21 பவுண் தங்க தாலிக்கொடியை, அயலவரான யுவதி அடிக்கடி வாங்கி மீளக் கொடுப்பது வழமை. இதேபோன்று அண்மையிலும் அவர் தாலிக்கொடியை வாங்கியுள்ளார். சில நாள்களின் பின்னர் அதனை அவர் மீள ஒப்படைத்துள்ளார். தாலிக்கொடியில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தங்கத் தாலிக்கொடியின் உரிமையாளரான பெண்ணுக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தபோதே, தங்கத்துக்குப் பதிலாக முலாம் பூசிய தாலிக்கொடியைக் கொடுத்த விடயம் அம்பலமானது.

21 பவுண் தங்கத் தாலிக்கொடியை பெற்ற அயல் வீட்டு யுவதி, சுன்னாகத்திலுள்ள நகைக் கடையில் அதை விற்பனை செய்துள்ளார். பின்னர் வேறொரு இடத்தில் வைத்து தங்கமுலாம் பூசிய - பார்ப்பதற்கு 21 பவுண் தங்க தாலிக்கொடி போல் இன்னொரு தாலிக்கொடியைத் தயாரித்துள்ளார். அதையே வாய்பேச முடியாத பெண்ணிடம் ஒப்படைத்துள்ளார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அயலவரான 26 வயதுடைய யுவதி சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ஓ-26)

**விற்பனையாளர் தேவை**
எமது உற்பத்திப் பொருட்களை
விற்பனை செய்ய
ஆர்வம் உள்ளவர்கள்
தேவை.
லியா பிறைவேட் (Ltd) - 077 623 7956
யாழ்ப்பாணம்.

**தனி அறை வாடகைக்கு**
யாழ். நீராவியடிப் பிள்ளையார்
கோவிலுக்கு அருகில் விசாலமான
அறை பெண்களுக்கு மட்டும்
வாடகைக்கு.
070 414 4877

**விற்பனை பிரதி நிதி தேவை**
யாழ்ப்பாணத்தில் உள்ள நிறுவனத்திற்கு விற்பனை பிரதி நிதி தேவை. O/L, A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 070 730 3454, 077 985 1946

**கனடா, UK விசாக்கள்**
"போலி மற்றும் சில சமூக வலைத்தளங்களின் தவறான வழிகாட்டலில் சிக்காதீர்"
நீண்டகால அனுபவம் கொண்ட
ஆலோசனை வல்லுனர்களின் வழிகாட்டல்
✓ புதிய Visit Visa Application
✓ நிராகரிக்கப்பட்ட Visit Visa மீள் விண்ணப்பித்தல
✓ Student Visa
✓ Super Visa
✓ Spouse and Family Visa
அகதி கோரிக்கை விண்ணப்பம் மற்றும் ஆலோசனை வழிகாட்டல்.
ஏற்கனவே Visit Visa வில் கனடா சென்று உள்ளவருக்கான வழிகாட்டல்.
தொடர்புக்கு :-
WhatsApp +014 379 299 005 / + 44 786 1383 633 / + 94 771 432 007

**வேலையாள் தேவை**
அரைக்கும் ஆலைக்கு (மில்)
வேலையாட்கள்
தேவை.
077 615 4941, 076 372 5367

**வேலையாள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இருக்கும் உணவகம்
ஒன்றிற்கு கொத்து, றைஸ் போடத்
தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
077 203 0625

**வேலையாள் தேவை**
கட்டடப் பொருட்கள் விற்பனை
நிலையத்துக்குரிய பிரதிநிதி
தேவை.
077 431 6125

**உடனடி வேலைவாய்ப்பு**
யாழில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கம்பனிக்கு, முகாமையாளர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் தகுதி உள்ளவர்கள் தேவை. பகுதி நேர வேலைவாய்ப்பும் உள்ளது.
076 1124 145

**டீசல் பம் திருத்துநர்**
யாழ் நகரில் இயங்கும்
வேலைத்தளத்திற்கு டீசல் வாகனங்களின்
பம், நொசல் திருத்துநர் தேவை.
(வயது 20 - 45)
077 253 0865

**கடை வாடகைக்கு**
பொற்பதி வீதி கொக்குவிலில் அலுவலக உபயோகத்திற்கு மட்டும் கடை வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 071 856 5662

**வேலையாட்கள் தேவை**
யாழ் நகரில் இயங்கும் பான்சி கடைக்கு
பெண் வேலையாட்கள் தேவை
அனுபவம் உள்ள பெண்ணிற்கு
முன்னுரிமை
தொடர்பு: 077 132 4319, 076 400 6436

## மரண அறிவித்தல்



மலர்வு 15.06.1982 உதிர்வு 02.02.2024

### கவிதா சஞ்சிதன் (கவி)

கோப்பாய் மத்தியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கவிதா சஞ்சிதன் (கவி) அவர்கள் கடந்த (02.01.2024) . வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு உரும்பிராயிலுள்ள இளங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.இ:0774192213
(பெரியண்ணை)

(CR 417729) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 06 . 1946



மறைவு 03 . 02 . 2024

### செல்லத்துரை பொன்னம்மா

புளியங்கண்டு (பிள்ள்ளயார்) வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பொன்னம்மா அவர்கள் நேற்று (03.02.2024) சனிக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வேலுப்பிள்ளை செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், வசந்தி, பத்மதாசன், சிவதாசன் (அருள்), சுகந்தினி (உபதபாலதிபர், ஆனைக்கோட்டை), உமாகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசாமி, ஹேமலதா, பாலமுருகேசன், பிரியதர்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிநயா, பிரவீணா, சஹானா, நிருபா, நிதூசன், சிவானி, சரணிதன், வாகீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற முருகேசு கந்தையா, மு.சண்முகம், சின்னத்தங்கச்சி, திருமதி செல்லப்பா வன்னியம்மை, காலஞ்சென்ற சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 03.30 மணியளவில் இடம்பெற்று, காக்கைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகன் - சிவதாசன் (அருள்) 077 828 6867
மகள் - சுகந்தினி 076 615 4996
மருமகன் - சிவசாமி 070 358 5875
பாலா - 021 071 0905

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27804) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாந்தன்...

மற்றும் மனோ கணேசன் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் கோரிக்கை விடுத்துள்ளனர்.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று சனிக்கிழமை நேரில் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான சிவஞானம் சிறீதரன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோர், ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலை பெற்றுள்ள சாந்தனை இலங்கை வர அனுமதிக்குமாறு கோரினர்.
இந்தக்கோரிக்கையை சாதகமாகப் பரிசீலித்து, சாந்தன் இலங்கை வந்து தன் வயதான தாயாரைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.
இது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேசிய பாதுகாப்புக்கான ஜனாதிபதி ஆலோசகர் சாகல ரட்நாயக்கவுக்கு, சந்திப்பின்போதே ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். (அ-ஒ-100-113-125)

## வெளிநாட்டுக்கு...

செய்துள்ளார். சில சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இடைத்தரகர் ஊடாகவும் பணத்தை வைப்புச் செய்துள்ளார். பணம் வைப்புச் செய்யப்பட்ட பின்னர் கொழும்பைச் சேர்ந்த முகவர் தொடர்புகளைத் துண்டித்ததையடுத்து சந்தேகமடைந்தவர், விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்தார்.
பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளுக்கு அமைவாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இடைத்தரகரான பெண் கைதாகியுள்ளதுடன், பிரதான சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளைப்பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். 'சமூகவலைத்தளங்களில் போலி விளம்பரங்களுக்கு மயங்கி ஏமாறுவதை இளையோர் தவிர்க்கவேண்டும்' எனவும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (அ-ஒ-26)

## கெஹலியவுக்கு...

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது.
மருந்துக் கொள்வனவு மோசடி தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை, அமைச்சரவையில் இருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்காத பட்சத்திலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் தெரிவித்தார்.
கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராக இருந்தபோது அவருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவந்தது. எனினும், அது தோற்கடிக்கப்பட்டது. ஆனால், கெஹலிய ரம்புக்வெலவிடம் இருந்து சுகாதார அமைச்சு பறிக்கப்பட்டு, அது ரமேஷ்பத்திரணவிடம் ஒப்படைக்கப்பட்டது.
இருந்தபோதிலும் கெஹலிய ரம்புக்வெல அமைச்சரவையில் நீடிக்கிறார். (அ-ஒ-44)


**காணி விற்பனைக்கு**

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பண்ணாகம் கிராமத்தில் 15 பரப்பு தென்னந்தோட்டம் (103 மரம்) விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 077 326 8914

**அண்ணா** விரைவு - நம்பிக்கை - பாதுகாப்பு
விரைவுப் பொதிகள் சேவை ANNA EXPRESS COURIER SERVICE
நல்லூர், யாழ்ப்பாணம், சங்கானை, வட்டுக்கோட்டை, ஆவரங்கால், கைதடி, நெல்லியடி, வவுனியா, திருகோணமலை.
077 122 1566 / 070 330 5500 / 077 923 5823
16 Kg க்கு மேல் 1 Kg லண்டன் - 950/= கனடா - 2200/=

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு A-9 வீதி கைதடி சந்தி அருகாமை.
தொடர்பு: 071 173 3911 076 853 5022


**வீடு வாடகைக்கு தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர், சுண்டுக்குழி, திருநெல்வேலி கொக்குவிலினை அண்டிய பகுதிகளில் நல்ல சுற்றாடலில் நாற்சதுர (நாற்சார்) வீடு ஒன்றினை எதிர்பார்க்கின்றோம். ஆயுள்வேத-மருத்துவ நிறுவனம் ஒன்றினை நடாத்துவதற்கு 2 வருடகால ஒப்பந்த அடிப்படையில் தேவை
Whats app : 076 764 1372
Call : 077 686 3415

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கி வரும் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை
1. விற்பனைப் பிரதிநிதி Gender: Male அனுபவம் உள்ளோர் க.பொ.த உயர்தரத்தின் பின் தொழில் எதிர்பார்ப்போர்.
2. விற்பனை உதவியாளர் Gender: Male
3. கணக்காளர் Gender: Male/Female
குறிப்பு: இம் மூன்று பதவி நிலைகளுக்கும் நேர்முகப் பரீட்சையின் போது உங்களுடைய அனுபவங்களை நிரூபிப்பதன் மூலம் உங்களுடைய சம்பளங்களை கவர்ச்சிகரமான மேலதிக கொடுப்பனவுகளுடன் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். (CS.28045) V-1
தொடர்புகளுக்கு: 077 120 8481


# மரண அறிவித்தல்



உதயம் 21.11.1953
மறைவு 01.02.2024

## மயில்வாகனம் குமாரவேல்ராசா

**(ஓய்வுபெற்ற கணக்காளர்)**

யாழ்ப்பாணம் செட்டியகுறிச்சி பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், குருக்கள் வீதி, மீசாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் குமாரவேல்ராசா (ஓய்வுபெற்ற கணக்காளர்) அவர்கள் கடந்த (01.02.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் சரஸ்வதி தம்பதியினரின் சிரேஸ்ட புத்திரரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் ஈசுவரி தம்பதியினரின் அன்பு மருமகனும், ஸ்ரீரதியின் அன்புக் கணவரும், கௌதமி, மதுசுதன், விபுலன், கபிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீகணன், கோபிதா ஆகியோரின் அன்பு மாமனும், ஞானவேல்ராசா, புனிதவதி, சிவசக்தி, மோகனச் சந்திரன், திலகவதி ஆகியோரின் அன்பு அண்ணனும், நளினா, காலஞ்சென்ற சிவதாசன், தங்கமலர், மற்றும் குலசிங்கம், ஆனந்தராசா, ஸ்ரீரங்கன், ஸ்ரீரஞ்சன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவகலை, மதிவதனி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் குருக்கள் வீதி, மீசாலை கிழக்கில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று (04.02. 2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று அவரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் .
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருக்கள் வீதி
மீசாலை கிழக்கு.
0774121777 / 0775997377

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 28029) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொலிறோ / சுப்பர் ஏஸ் வாகனங்கள் வாங்கப்படும்**

**075 774 4652**

(cs.53840) (N-1)

## விற்பனைக்கு

பவித்த நல்ல நிலையிலுள்ள சிறுவர்களுக்கான சைக்கிள்கள்(Mountain Bycycle) இரண்டு விற்பனைக்குண்டு.

**071 814 8150**

## விற்பனைக்கு

வீட்டுத்தளபாடங்கள், தையல்கடை உபகரணங்கள், துணிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

**077 938 4809, 076 271 2353**

## வாடகைக்கு

மில் (கிறைன்டிங் மில்) வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: **077 5695 159**

## பணிபெண் தேவை

வீட்டில் சமையல் வேலை செய்வதற்கும் வீட்டு வேலைகள் செய்வதற்கும் பெண் வேலையாள் தேவை. (யாழ்நகரிற்கு அண்மையில் இருப்பவர் விரும்பத்தக்கது)

**077 257 8627, 077 887 5945**

## தேவை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி றோட்டில் உள்ள உணவகத்திற்கு பிரியாணி செய்பவர், பரோட்டா மாஸ்டர், சமையல் உதவியாளர், சப்ளையர் தேவை.

தொடர்பு: **075 4405362**

(cs.38181) (N-1)

## முகாமையாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் Fancy Shop ற்கு குறைந்தது 3 வருட வேலை முன் அனுபவம் உள்ள Sale Promotion முகாமையாளர் தேவை.

**Call - Whatsup CV**

**070 616 8869**

Wins Home Care Services (PVT) Ltd நிறுவனத்திற்கான பதவி வெற்றிடங்கள்

- Accountant (கணக்காளர்)
- Field Officer (கள உத்தியோகத்தர்)

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (மோட்டர் சைக்கிள் செலுத்தும் சாரதி அனுமதிப்பத்திரம் உடையவர்கள் விரும்பத்தக்கது.)

**077 666 4438, 077 970 0512**

## வீடு மற்றும் கடை கீழ் தளம் வாடகைக்கு உள்ளது

ஆனைப்பந்தி சந்திக்கு அருகில் நிறுவனங்களுக்கு உகந்த வகையில் இரண்டு மாடி வீடும் மற்றும் கடை ஒன்றும் வாடகைக்கு உள்ளது.

தொடர்பு: **071 73 500 67**

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

யாழ் இந்துக்கல்லூரி வீதியில்

**GCE Advanced Level** எடுத்தவர்களுக்கு

**பேச்சுப் பயிற்சி வகுப்புகள்.**

தனி, குழு வகுப்பு

ஆண்டு 7 to GCE OL, AL, பட்டதாரிகள் - தொழில்புரிவோர்.

K.Ganesh B.A **077 766 8725**

# விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி

இல. 63, கிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

## A/L 2023

**செயன்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்**

- பொறியியல் தொழினுட்பம்
- உயிர்முறைமைகள் தொழினுட்பம்

- ஆரம்பம் - 05.02.2024
- நேரம் - காலை 9.00 am

- பரீட்சையில் எதிர்பார்க்கப்படும் செய்முறை வினாக்களைக் கொண்ட பரீட்சைகள் நடத்தப்பட்டு மதிப்பீட்டுப் புள்ளிகள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனித்தனியாக அனைத்து செயன்முறைகளும் பயிற்றுவிக்கப்படும்.
- செயன்முறைகள் அனைத்தும் 08 வருட பரீட்சை மதிப்பீட்டு அனுபவமுடைய ஆசிரியர்களால் மாத்திரமே நடைபெறும்.

(cs.53170) (N-1)

தொடர்பு: **077 248 7774 / 076 552 9093**

# காணி விற்பனைக்கு

இராச வீதி பிரதான முகப்புடன் 03 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

**தொடர்புகளுக்கு:- ஜெயம்**

**077 814 7389, 077 986 5457.**

## விற்பனைக்கு

மேசை பொருத்தப்பட்ட சில்லுகளுடன் கூடிய BBQ மெசின் விற்பனைக்கு உண்டு. உணவகங்களுக்கு ஏற்றது.

**071 814 8150**

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

கற்புலம் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயில் உள்ள 7 பரப்பும் 5.25 குழியும் உடைய காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

**077 412 1657, 077 732 8583**

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Leaster Generator, England 37 KW விற்பனைக்கு உள்ளது.

விலை 7 லட்சம்

தொடர்பு: **077 366 4138**

(cs.53821) (N-1)

## வேலையாட்கள் தேவை

தீவுப்பகுதியிலுள்ள அம்மன் ஆலயத்திற்கு மாட்டுப்பண்ணை பராமரிப்பாளர், பல வேலையாட்கள், சமையற்காரர், தோட்டக்காரர் தேவை. குடும்பமாகவும் வரலாம். தங்குமிட வசதி, மதிய உணவு இலவசம். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

(cs.53757) (N-1)

தொடர்பு: **077 909 5491**

## வீட்டுப்பணிப்பெண் தேவை

நல்லூர்ப் பகுதியில் 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு (வைத்தியர்), வீட்டில் வேலைசெய்ய 40 - 50 வயதிற்குட்பட்ட பணிப்பெண் தேவை. தங்கி இருந்து வேலை செய்யக்கூடியவர் அல்லது சென்று வரக்கூடியவர்கள் தொடர்புகொள்ளவும். (சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்)

(cs.53846) (N-1)

**077 298 7556**

# INFORMATION TECHNOLOGY PARK

*Jaffna, Srilanka*

*Under the purview of the Ministry of Investment Promotion*

MPCS Building, 127,K.K.S Road, Jaffna, Srilanka

Office :- 021 222 3641

Fax No :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்

2024 **February** Batch

- *Dip.in Microsoft Office*
- *Dip.in Desktop publishing*
- *Dip.in Information Technology*
- *Dip.in Computer Programming*
- *Dip.in Wep Page Designing*

06 Month **Online Course**

- *Dip.in PC Application & Office Management*

06 Month **Languages**

- *VB.net*
- *PHP*
- *C/C++*
- *C#*
- *Java*
- *AutoCAD*

20 hours **Workshops**


- *Internet & Email*
- *Hardware*

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் | :- 22.02.2024 |
| வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் | :- 24.02.2024 |

*CENTRE FOR INFORMATION TECHNOLOGY*

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் : 29.07.1948 மறைவு : 06.01.2024

கடந்த 06.01.2024 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சின்னரெத்தினம் மகாலிங்கம்

**(உத்தரவு பெற்ற நில அளவையாளர்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (05.02.2024) திங்கட்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் வல்வெட்டித்துறை ஊறணியில் அமைந்துள்ள அந்தியேட்டி மடத்தில் ஆரம்பமாகி தீர்த்தக் கடற்கரையில் அஸ்தி கரைக்கப்படும் அதனைத்தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் முற்பகல் 11.00 மணியளவில் வேவில் பிள்ளையார் கோவில் வீதி, வல்வெட்டித்துறையில் உள்ள சின்னரெத்தினம் சற்குணலிங்கம் அவர்களது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

வேவில் பிள்ளையார் கோவில் வீதி, வல்வெட்டித்துறை.

சரோஜினிதேவி செல்வவிநாயகம் - 077 434 2226
ஞானலிங்கம் கமலாதேவி (மாசாத்தி)
கமலாதேவி அமிர்தலிங்கம் - 075 046 8445
சற்குணலிங்கம் ரதி - 077 824 8559

(cs.26588) (N-1)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

சுப்பண்ணா சொன்னாருன்னா
சுதந்திரம் வந்ததுன்னு
எப்பண்ணா வந்ததின்னேன்
எனக்கும் தெரியலேன்னார்
அப்பண்ணா நாம இன்னும்
அடிமைகள் தானா அண்ணா?
- கண்ணதாசன்

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2053 | தை 21 | ஞாயிற்றுக்கிழமை (04.02.2024) | சிகரம் : 184



# தமிழரசுக்கட்சியை அந்தக்கட்சிக்காரர்களிடமிருந்தே காப்பாற்றுவது யார்?

நிலாந்தன்

சில மாதங்களுக்கு முன்பு தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பசுபதிப்பிள்ளையின் நினைவு நாள் கிளிநொச்சியில் அனுஷ்டிக்கப்பட்டது. அதில் நினைவுரை ஆற்றிய இந்தக்கட்டுரையாசிரியர் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தார். இரண்டு தேர்தல்கள் நடந்தால் அவை தமிழ் மக்களின் தோல்வியை வெளிக் கொண்டுவரும் என்று. ஒன்று, தமிழரசுக் கட்சிக்குள் நடக்கும் தேர்தல். இரண்டாவது, மாகாண சபைத்தேர்தல். அண்மையில், தமிழரசுக்கட்சிக்குள் நடந்த தேர்தல் தமிழ் அரசியலின் சீரழிவை வெளிக் கொண்டு வந்திருக்கிறது.

அரசியல் விமர்சகர் ஜோதிலிங்கம் கூறுவது போல, தமிழ்மக்கள் மத்தியில் கட்சிகள் கிடையாது. தேர்தலில் வாக்குக் கேட்கும் குழுக்கள்தான் உண்டு என்பது சரியா? ஏனென்றால் கட்சிகளுக்குரிய கட்டுக்கோப்பு; யாப்பு; கூட்டுப் பொறுப்பு என்பன இருந்திருந்தால் பொதுச் செயலாளர் தெரிவில் அப்படி ஒரு குழப்பம் நடந்திருக்காது. அந்தக் குழப்பம் பின்வரும் விடயங்களை நமக்கு உணர்த்துகின்றது. முதலாவது, தமிழரசுக்கட்சி ஒரு கட்டுக்கோப்பான கட்டமைப்பாக இல்லை. அது சிதைந்து போய்விட்டது. ஒரு பொது முடிவை எடுக்க முடியாத அளவுக்கு கட்சி அதன் கூட்டுணர்வை இழந்துவிட்டது. இரண்டாவது, சிறீதரனின் தலைமைத்துவத்தை அவருடைய எதிரணி ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் தோல்வியை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. அதாவது தொகுத்துப் பார்த்தால் தமிழரசுக்கட்சித் தலைவருக்கான தேர்தலோடு இரண்டாகி நிற்கின்றது.

ஆனால் இதுவிடயத்தில் தமிழரசுக்கட்சியின் சீத்துவக்கேட்டை விமர்சிக்கும் ஏனைய கட்சிகள் மட்டும் ஜனநாயகக் கட்டமைப்பாக உள்ளனவா? அங்கேயும் பரம்பரைத் தலைவர்கள்; கேள்விக்கிடமற்ற நிரந்தரத் தலைவர்கள் என்ற ஏற்பாடுகள்தானே உண்டு ? கட்சி மாநாடுகள் வைக்கிறார்கள். ஆனால் திரும்பத் திரும்ப ஒருவரே தலைவராகத் தெரிவு செய்யப்படலாமென்றால் அதன் பொருள் என்ன? கட்சிக்குள் வேறு தலைவர்கள் வரவில்லை என்பதா? அல்லது இருக்கின்ற தலைவர் கடவுளா?

எனவே தமிழரசுக்கட்சியை விமர்சிக்கும் யோக்கியம் ஏனைய கட்சிகளுக்கு கிடையாது. தமிழரசுக்கட்சியைப் பின்பற்றி ஏனைய கட்சிகளும் தமது உயர்மட்டப் பொறுப்புகளை தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும். உட்கட்சி ஜனநாயகத்தைப் பாதுகாக்கவில்லையென்றால், தமிழ் அரசியலின் ஜனநாயக இதயத்தைப் பலப்படுத்தமுடியாது. தமிழ் அரசியலின் ஜனநாயக இதயத்தைப் பலப்படுத்தவில்லையென்றால் தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்தமுடியாது. ஏனென்றால், தேசியத்தின் இதயம் ஜனநாயகம்தான். தேசியவாதம் தொடர்பான மேற்கத்திய அறிஞர்களின் மேற்கோள்களின்படி, தேசியவாதத்தின் உள்ளடக்கம் ஜனநாயகமாக இருக்கவேண்டும். கட்சிகளுக்குள் ஜனநாயகம் இல்லையென்றால், அவை தங்களைத் தேசியக்கட்சிகள் என்று கூறிக்கொள்வதில் பொருள் இல்லை. எனவே தமிழரசுக்கட்சிக்குள் நடந்த தேர்தல் எல்லா விதமான விமர்சனங்களோடும் முற்போக்கானது.

அது ஜனநாயகத்தின் மீது கொண்ட நம்பிக்கையால், அல்லது கட்சிக்குள் உட்கட்சி ஜனநாயகம் செழித்தோங்கியிருக்கிறது என்பதற்காக நடத்தப்பட்ட ஒரு தேர்தல் அல்ல. கட்சிக்குள் ஜனநாயகமே இல்லை; கூட்டு முடிவுகள் எடுக்கப்படுவதில்லை; தனியோட்டங்கள்தான் உண்டு; சுமந்திரனும் சம்பந்தரும் தங்களுக்கு இடையே பேசி முடிவுகளை எடுத்தார்கள்; சுமந்திரன் யாரையும் பொருட்படுத்தாமல் தனியோட்டம் ஓடினார் என்ற குற்றச்சாட்டுகள் பல ஆண்டுகளாக இருந்து வருகின்றன.

ஆனால் சுமந்திரன் கூறுகிறார், கூட்டுப் பொறுப்பு என்று கூறி ஏனைய கட்சி முக்கியஸ்தர்களையும் அழைத்துக்கொண்டு சந்திப்புகளுக்குச் சென்றால், சந்திப்பு முடிவதற்கிடையில் ஊடகங்களுக்குத் தகவல்கள் கசிய விடப்படுகின்றன என்று. அதாவது கட்சியின் முக்கியஸ்தர்கள் கூட்டுப் பொறுப்புடன் நடந்து கொள்வதில்லை என்று. அவ்வாறு கட்சியின் கூட்டுப் பொறுப்பை சிதைத்தமைக்கு அவருடைய தனி ஓட்டங்கள்தான் காரணம் என்று கட்சியின் மேல்மட்ட உறுப்பினர்கள் கூறுகிறார்கள். இவ்வாறு கட்சிக்குள் ஜனநாயகம் சிதைந்து போயிருந்த ஒரு காலகட்டத்தில், தலைமைப் பொறுப்புக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்ற நிலைமைகளை சுமந்திரனை உருவாக்கினார். அவர் அதை உருவாக்கக் காரணம் கட்சிக்குள் ஜனநாயகத்தைப் பலப்படுத்த வேண்டும் என்பதற்காகவா? அல்லது கதிரைகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் சம்பந்தரையும் மாவையையும் கதிரைகளை விட்டு அகற்ற வேண்டும் என்பதற்காகவா? நடப்பு நிலைமைகளைத் தொகுத்துப்பார்த்தால், இருவரையும் கதிரைகளை விட்டு அகற்றுவதற்காகத்தான் சுமந்திரன் ஒரு தேர்தலை நோக்கி நிலைமைகளை நகர்த்தினார் என்று எடுத்துக்கொள்ளவேண்டும். ஒரு தேர்தல் நடந்தால் அதில்தான் வெல்வேன் என்று அவர் உறுதியாக நம்பினார். அதற்குரிய வேலைகளை அவர் ஏற்கனவே செய்துவிட்டார். எனவே, வெற்றி நிச்சயம் என்று நம்பியபடியால்தான் அவர் தேர்தலை நோக்கி நிலைமைகளை நகர்த்தினார். தனக்கு வெற்றி நிச்சயம் என்பதனால், கட்சியை ஒரேடியாகத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடலாம் என்று அவர் நம்பினார்.

ஆனால் சிறீதரன் தொடக்கத்திலிருந்து நம்பிக்கை தளராமல் உழைத்தார். கடைசிக் கட்டத்தில் தளம்பிக் கொண்டிருந்த வாக்காளர்கள் தமிழ்த் தேசிய உணர்வுக்குப் பயந்து விட்டார்கள். தமிழ்த் தேசிய உணர்வின் அடிப்படையில் சிறீதரன் வெல்லலாம் என்ற சந்தேகத்தில், தளம்பிக் கொண்டிருந்த வாக்காளர்கள் சுமந்திரனுக்கு எதிராக முடிவெடுத்தார்கள். வீட்டுச் சின்னத்துக்கு விழும் வாக்குகள் ஒரு கூட்டுணர்வின் அடிப்படையில் விழும் வாக்குகளே. அக்கூட்டுணர்வுதான் தமது ஆதரவுத் தளம் என்று நம்பும் அரசியல்வாதிகள் அதற்குப் பயப்படுவார்கள். ஆனால் அதற்காக, அதை ஒரு முழுமையான கொள்கை வெற்றியாக வியாக்கியானம் செய்யத் தேவையில்லை. குறிப்பாக இது கட்சிக்குள் நடந்த தேர்தல். இதில் பங்குபற்றியவர்கள் பொதுமக்கள் அல்லர், மாறாக அரசியல்வாதிகளே. அதாவது அரசியல் விலங்குகள். அரசியல் விலங்குகள் கொள்கைக்கு உண்மையாக இருக்கும் என்றெல்லாம் கற்பனை செய்யத் தேவையில்லை.


சுமந்திரன் எதிர்பாராத தோல்வி. அவருடைய ஆதரவுத் தளம் நலன்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டது.

08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடி வேறு: ஹிட்லர் வேறு



*(இந்தக் கட்டுரையில் இடம்பெறும் கருத்துகள் எவையும் உதயன் - சஞ்சீவியுடையதல்ல, மாறாக கட்டுரையாளரினதே)*

○ ந.பரமேஸ்வரன்

கடந்த ஞாயிற்றுக்கிழமை உதயன் சஞ்சீவியில் ஸபர் அஹமட் என்பவர் 'மோடியும் ராஜபக்சக்களும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை வரைந்திருந்தார். மேற்படி கட்டுரையின் இறுதியில் மோடியை நவீன ஹிட்லர் என வர்ணித்திருந்தார். இப்படி எடுத்த எடுப்பில் ஒரு ஜனநாயக நாட்டின் தலைவரை ஹிட்லர் என விளித்து எழுதுவது ஏற்கத்தக்கதல்ல. சரி, மோடி ஹிட்லருக்கு நிகரானவர் என்றே வைத்துக் கொள்வோம். மணிப்பூரில் எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள்? சர்வதேச ஊடகங்களின் தகவல் படி ஆக 175 பொதுமக்கள் தான் மணிப்பூரில் கொல்லப்பட்டுள்ளனர்.

ஹிட்லரால் படுகொலை செய்யப்பட்ட யூதர்களின் எண்ணிக்கை ஆறு மில்லியன் என்பது ஸபர் அஹமட்டுக்கு தெரிந்தே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. மோடி மணிப்பூர் பக்கம் எட்டியும் பார்க்கவில்லை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதே. ஆனால் அதற்காக மோடியை ஹிட்லருடன் ஒப்பிடுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. மணிப்பூர் கலவரங்களின் பின்னணியில் பாரதிய ஜனதா இருந்ததா என்றால் அதுவும் இல்லை. மணிப்பூரில் இடம் பெற்றது சாதிக்கலவரமே.

தெற்காசிய நாடுகளைப்பொறுத்த மட்டில் என்ன தான் மதமாற்றம் இடம்பெற்றாலும் சாதி என்பது வேறு மதங்களை பின்பற்றுவோரிடையேயும் தொடரத்தான் செய்கிறது. இது தெற்காசியாவின் சாபக்கேடு என்று சொல்லலாம். இந்துக் கடவுள்களை சாத்தான்கள் என்று கூறினாலும் அவர்களால் தமது சாதி அடையாளத்தை மட்டும் கைவிட முடியாதுள்ளது. இஸ்லாமியக் குடியரசான பாகிஸ்தானின் சையத் சாதியைச் சேர்ந்த ஒருவர் ஷேக் சாதியைச் சேர்ந்தவரைத் திருமணம் செய்த காரணத்தால் இலங்கையில் அகதியாக தஞ்சம் புகுந்துள்ளார். தான் பாகிஸ்தானுக்கு திரும்பிச்சென்றால் தன்னைக் கொன்று விடுவார்கள் எனவும் அதிலும் பார்க்க தான் இலங்கையிலேயே சாகலாம் எனவும் அவர் 'அல்ஜசீராவுக்கு' தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலும் முன்பு சாதிக்கலவரங்கள் இடம்பெற்றுள்ளன. இந்தச் சாதிக்கலவரங்களை அரசியல்வாதிகளோ அரசாங்கமோ தூண்டவில்லை. சில சமயங்களில் அரசியல்வாதிகள் தமது வாக்கு வங்கிக்காக சாதிப்பிரச்சினையை பயன்படுத்தினார்களே ஒழிய எந்தவொரு சாதிக்கலவரத்திலும் அரசியல்வாதிகள் பின்னணியில் இருந்ததாகவோ தூண்டியதாகவோ வரலாறு இல்லை. மணிப்பூரிலும் இதேநிலை தான் சற்று வித்தியாசம் என்னவென்றால் உயர்சாதி இந்துக்களால் மலைவாழ் பழங்குடி கிறிஸ்தவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். இதேபோன்ற ஒரு சம்பவம் (கலவரம் அல்ல) யாழ்ப்பாணத்திலும் நூறு வருடங்களுக்கு முன்னர் இடம் பெற்றுள்ளது. புங்குடுதீவில் குறைந்த சாதிக்கார கிறிஸ்தவர் ஒருவர் சப்பாத்து அணிந்து விட்டார் என்பதற்காக உயர்சாதி இந்துக்கள் அவரைச் சுட்டுக் கொன்று விட்டனர். இந்தச் சம்பவத்துக்காக அப்போது இருந்த தமிழ் அரசியல்வாதிகளை குறைகூற முடியுமா? பின்னர் சிறிமாவின் ஆட்சியில் வில்லூன்றி மயானத்தில் குறைந்த சாதிக்காரர் ஒருவரின் சடலத்தை தகனம் செய்ய முயன்ற போது உயர்சாதியினர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர். அதற்காக அரசியல்வாதிகளையோ, அரசாங்கத்தையோ குற்றம் சாட்ட முடியுமா? மோடியை ஹிட் லரு டன் ஒப்பிடுவதாக இருந்தால் மிசோரம் கிளர்ச்சியின் போது தனது சொந்த மக்களையே கொலை (இந்திய இராணுவம் நிகழ்த்திய) செய்த இந்திரா காந்தியையும், ஈழத்தில் 2000 (உத்தியோகபூர்வபுள்ளிவிபரங்களின்படி) அப்பாவித் தமிழ் மக்களின் படுகொலைக்கு காரணமாக இருந்த ராஜீவ் காந்தியையும் தான் ஹிட்லருடன் ஒப்பிடவேண்டும்.

அடுத்ததாக ஸபர் அஹமட் குறிப்பிட்டுள்ள விடயம் தான் நகைப்புக்குரியதாக உள்ளது. ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நடத்தும் ஆட்சிக்கும் மோடியின் ஆட்சிக்கும் எந்தவொரு வித்தியாசமும் இல்லை என ஸபர் அஹமட் குறிப்பிட்டுள்ளளார். இந்தியாவிலுள்ள கிறிஸ்தவத் தேவாலயங்களையும் மசூதிகளையும் இந்திய இராணுவத்தின் பீரங்கிகளைக்கொண்டு தகர்த்தாரா மோடி? அல்லது சேலை அணியாத இந்தியப்பெண்களை சிறைக்கு அனுப்பினாரா? பெண்கள் ஆண் துணையின்றி வீட்டை விட்டு வெளியேறக்கூடாது என உத்தரவிட்டாரா? பெண்கள் கல்வி கற்கக்கூடாது என உத்தரவிட்டாரா?

> "ஹிட்லரால் படுகொலை செய்யப்பட்ட யூதர்களின் எண்ணிக்கை ஆறு மில்லியன் என்பது ஸபர் அஹமட்டுக்கு தெரிந்தே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. மோடி மணிப்பூர் பக்கம் எட்டியும் பார்க்கவில்லை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதே. ஆனால் அதற்காக மோடியை ஹிட்லருடன் ஒப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. மணிப்பூர் கலவரங்களின் பின்னணியில் பாரதிய ஜனதா இருந்ததா என்றால் அதுவும் இல்லை. மணிப்பூரில் இடம்பெற்றது சாதிக்கலவரமே."

மோடியின் ஆட்சியில் இந்துத்துவா வார்ச்சியடைகிறது என மேற்குலக ஊடகங்களும் அரபு ஊடகங்களும் செய்தி வெளியிட்டுள்ளன.

மோடியைக் ஹிட்லருடன் ஒப்பிட்டு மோடி ஆட்சியை தலிபான்களின் ஆட்சியுடன் ஒப்பிடும் ஸபர் அஹமட்டிடம் ஒரு கேள்வியை முன்வைக்கலாமென நினைக்கிறேன். மோடியின் ஆட்சியில் ஒரு கிறிஸ்தவரோ அல்லது முஸ்லிமோ தனக்கு அச்சுறுத்தல் எனக்கூறி ஐரோப்பாவிலோ அமெரிக்காவிலோ அல்லது எல்லை முஸ்லிம் நாடுகளான பாகிஸ்தானிலோ, பங்களாதேஷிலோ தஞ்சம் புகுந்துள்ளனரா?

இன்னும் சொல்லப்போனால் ரோஹிங்கியா முஸ்லிம்கள் இந்தியாவுக்கு அகதியாக வருகின்றனர். இந்தியாவும் அவர்களுக்கு குடியுரிமை வழங்குகிறது. தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள பெரும்பான்மை இந்துக்களையும் கிறிஸ்தவர்களையும் கொண்ட ஈழத்தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க மறுக்கும் மோடி அரசு மியான்மரிலிருந்து வரும் ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குகிறது. மோடியின் ஆட்சி, தலிபான்களின் ஆட்சியைப்போன்ற ஆட்சி என்றால் ரோஹிங்கியா முஸ்லிம் அகதிகள் 'ஷரீ ஆ' சட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஆப்கனிஸ்தானுக்கும் இஸ்லாமிய குடியரசான பாகிஸ்தானுக்கும் தான் செல்ல வேண்டும். ஆனால் ரோஹிங்கியா முஸ்லிம் அகதிகள் இந்துத்துவாவை வலியுறுத்தும் இந்தியாவுக்குள் எதற்காக வருகிறார்கள்?

நாட்டின் பிரதமராக இருந்தாலென்ன, ஜனாதிபதியாக இருந்தாலென்ன தான் பின்பற்றும் மதத்தின் வளர்ச்சிக்கு உதவி செய்வதில் தவறு ஏதாவது இருக்கிறதா? பாரதிய ஜனதா இந்துத்துவாவை வலியுறுத்தும் கட்சி. காங்கிரஸ் ஆட்சியில் இந்தியாவை ஆட்சி செய்த இந்தியப் பிரதமர்கள் இந்திரா காந்தி, ராஜிவ் காந்தி போன்றோர் காஞ்சி காமகோடி பரமாச்சார்ய சுவாமிகளிடம் ஆசி பெற்றது ஸபர் அஹமட்டுக்கு தெரிந்தும் இருக்கலாம் தெரியாமலும் இருக்கலாம்.

மோடி பாபர் மசூதியை இடித்து விட்டு இராமர் கோயில் கட்டி விட்டார் என கவலைப்படும் ஸபர் அஹமட், 'நான் தான் பிள்ளையார் கோயிலை இடித்து விட்டு அந்த இடத்தில் சந்தை கட்டினேன்' என பகிரங்க அறிக்கை விட்ட ஹிஸ்புல்லாவிடம் பிள்ளையார் கோயில் இருந்த இடத்தில் மீண்டும் பிள்ளையார் கோயிலை கட்டிக்கொடுங்கள் என கோரிக்கை விடுவாரா? கல்முனை தமிழ்ப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் அலுவலக வளாகத்தினுள் இந்து கோயில் கட்டுவதற்கு தடை உத்தரவு கோரி நீதிமன்றம் சென்ற முஸ்லிம்களிடம் தமிழர்கள் தமது பிரதேசத்தில் தாம் வணங்கும் தெய்வத்துக்கு கோயில் கட்டினால் உங்களுக்கு என்ன? என கேள்வி எழுப்புவாரா?

ராஜபக்சக்களை பற்றியும் கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். தமிழ் தான் எமது தாய் மொழி என்று சொல்லிக் கொண்டு தமிழர்களின் வழிபாட்டுத்தலங்களை அழிக்கும் கிழக்கு மாகாண இஸ்லாமிய வெறியர்களுடன் ஒப்பிடுகையில் ராஜபக்சக்கள் நல்லவர்கள் என்றே சொல்ல வேண்டும். 2009 வரையும் இலங்கையில் சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்களான திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் போன்ற தலங்கள் முற்று முழுதாக இராணுவக் கட்டுப்பாட்டிலேயே இருந்தன. ஸ்ரீலங்கா இராணுவம் கோயில்களில் கை வைக்கவில்லை. (ஸ்ரீலங்கா இராணுவமோ சிங்கள ஆட்சியர்களோ நினைத்திருந்தால் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த அனைத்து வழிபாட்டுத்தலங்களையும் தரைமட்டமாக்கியிருக்க முடியும், ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை) யுத்தம் முடிந்து நகுலேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்றபோது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நேரில் விஜயம் செய்து 35 இல்ட்சம் ரூபா பெறுமதியான தங்கக்கிரீடத்தை நகுலேஸ்வரப்பெருமானுக்கு அன்பளிப்புச்செய்தார்.

இறுதியாக ஒரு விடயம் நான் பாரதிய ஜனதா ஆதரவாளனோ இந்திய சார்பு நிலைப்பாடு உடையவனோ அல்ல. இந்து மதக் கொள்கைகளை பின்பற்றி வாழ்ந்து வரும் ஒரு ஈழத்தமிழன். அவ்வளவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரஜீவன் ராம்

# இலங்கைக்குள் தமிழ்த்தேசியம்

## வரலாறும் அதன் பயணப்பாடும் 1



அண்மையில் இடம்பெற்ற தமிழரசுக்கட்சியின் தலைவர் தெரிவின்போது பிராதான பேசுபொருளாக தமிழ்த்தேசியம், தமிழ்த் தேசியநீக்க அரசியல்என்றசொல்லாடல்கள் அநேகரால் முணுமுணுக்கப்பட்டதை அவதானிக்கமுடிந்தது. குறிப்பாகத் தமிழரசுக்கட்சி உறுப்பினராக இருந்துகொண்டேசுமந்திரன்தமிழ்த்தேசிய நீக்க அரசியலை மேற்கொண்டு வந்தார் என குற்றம்சாட்டப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டைசாதாரணபொதுமக்களோஅல்லது கட்சி அடிமட்ட உறுப்பினர்களோ முன்வைக்கவில்லை. தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், தமிழரசுக்கட்சியின் தலைவர் பதவிக்கான போட்டியில் மூவரில் ஒருவராகக் களத்தில் குதித்தவருமான சீ. யோகேஸ்வரன், சுமந்திரன் மீது இத்தகைய பாரதூரமான விமர்சனமொன்றை பகிரங்கமாக முன்வைத்தபோது, அது பற்றியெரியும் விவகாரமாக மாறியது.

இந்த நிலையில், தமிழ்த் தேசியம் என்றால் என்ன? உண்மையில் தமிழ்த் தேசிய நீக்கத்தை சுமந்திரன் செய்தாரா அல்லது அவ்வாறு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டதா? தமிழரசுக்கட்சியின் தமிழ்த் தேசியப் பயணம் எவ்வாறாக அமைந்தது? இனிமேல் எவ்விதம் அமையவேண்டும் என்றஒருசிறுஅலசலாகஇந்தத்தொடர்அமையவுள்ளது.

### தேசியமும் தமிழ்த்தேசியமும்

ஜே.கால்ரன், ஜே.ஹாசின்சன் போன்ற அறிஞர்களின் 'தேசியம்' என்பதற்கான வரைவிலக்கணத்தில் இருந்தே 'தமிழ்த் தேசியம்' என்ற கருத்தும் பிறப்பெடுத்தது. அதனடிப்படையில்தெற்காசியாவில்தனித்துவமானபாராம்பரிய வரலாற்றைக் கொண்ட தமிழ்மக்கள் ஏனைய இன மக்களின் அடக்கு முறைகளில் இருந்து விடுபட்டு தமது அரசியல், பொருளாதார, சமூக உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காவும் இனத்தின் இருப்பை உறுதிப்படுத்திக்கொள்வதற்காகவும், தமது கலாசாரப் பாரம்பரியங்களை மீள் கட்டமைப்புச்செய்து எதிர்கால சந்ததியினருக்கு ஊடுகடத்துவதை நோக்கமாகக் கொண்டு தமிழ் மக்கள் மத்தியில் இயல்பாக உருவான உணர்வையே 'தமிழ்த் தேசியம்' என்பதாக வரையறுக்கமுடியும்.

தமிழ்த்தேசியச்சிந்தனை என்பதுதமிழ் இனத்தின்நலனை முதன்மை நோக்காகக் கொண்டது. இங்கு ஒரு குறித்த சிலரை அல்லது குழுவை மட்டும் தமிழ்த்தேசியவாதிகள் எனக் கூறிவிட முடியாது. தமிழராகப் பிறந்தவர் அனைவருமே தமிழ்த்தேசிய உணர்வுக்கு உரித்துடையவர்கள். 'எனக்கு மட்டுமே தமிழ்த்தேசிய உணர்வு உரித்தானது' என்றோ 'உங்களுக்கு தமிழ்த் தேசியத்தைப் பின்பற்ற அருகதை கிடையாது' என்றோ எவருமே தனியுரிமை கொண்டாடமுடியாது. ஆனால் யதார்த்தம் அவ்வாறில்லை. ஒரு சில கட்சிகள், அமைப்புகள், தனிநபர்கள் என்போர்தாமே தமிழ்த் தேசியத்தின் ஏகபோக உரிமையாளர்கள் என்பதாகவே நடந்துகொள்கிறார்கள். தம்மைத் தூய தமிழ்த் தேசியவாதிகளாகப் பிரகடனப்படுத்தும் இத்தகையவர்கள், தமக்கு எதிரானோரை மிக எளிதாக 'தமிழ்த் தேசிய விரோதிகள், துரோகிகள்' என்று அடையாளப்படுத்தி, அவர்களின் குரலை இல்லாமல் செய்வதையே அதிகம் விரும்புகின்றனர்.



Social Intell

### இலங்கையில் தமிழ்த் தேசியம்

பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் துளிர்விட்ட தமிழ்த்தேசிய இன உணர்வு ஜனநாயக கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ்த்தேசிய உணர்வுக்கான விதை என்பது பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட கோல்புறாக் கமரன் அரசியல்சீர்திருத்தத்தில் இடப்பட்டுவிட்டது எனலாம். நெருப்பில்லாமல் புகையாது என்பது போல பிரித்தானியர் காலத்துக்கு முன்னரே இந்தத்தீவில் வாழ்ந்த மக்கள் மனதில் இன உணர்வே மேல் எழுந்து காணப்பட்டது. இதை பண்டைய வரலாறுகளில் இருந்து எம்மால் அறிந்து கொள்ள முடியும். கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இந்தத் தீவில் கண்டிச் சிங்களவர், கரையோரச் சிங்களவர், தமிழர் என்ற மூன்று இனக் குழுவினர் வாழ்ந்த போதும் இவர்கள் எவருமே ஒன்றிணைந்து வாழும் போக்கினை கொண்டிருக்கவில்லை. மொழியாலும் மதத்தாலும் சாதிய கட்டமைப்பினாலும் பழக்க வழக்கத்தினாலும் வேறுபட்டுக்காணப்படனர். இப்படித் தனித்துவமாக இருந்த இந்த மூன்று இனக்குழுவினரையும் ஒன்றிணைத்து ஒரு நிர்வாகக் கட்டமைப்புக்குள் பிரித்தானியர் உட்புகுத்தினர். இதன் மூலம் இலங்கையில் முடி ஆட்சிமுறை முற்றாக ஒழிக்கப்பட்டது.

ஜனநாயக ஆட்சிக்கான அடித்தளம் பிரித்தானியரால் இடப்பட்டது. அந்த வகையில் இலங்கையின் ஜனநாயக ஆட்சிக்கு அடித்தளமாக அமைந்த முதலாவது அரசியல் சீர்திருத்தமான கோல்புறுக் கமரன் அரசியல் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. கோல்புறுக் கமரன் அரசியல் சீர்திருத்தத்தின் சிறப்பம்சமாக கருதப்பட்ட இனவாரி பிரதிநிதித்துவ முறை, புகை நிலையில் இருந்த இலங்கை மக்களின் இன உணர்வில் மெல்லமெல்ல தீப்பற்றக் காரணமாக அமைந்தது. பற்ற வைத்த தீயை பிரதேசவாத பிரதிநிதித்துவ முறை மூலம் அணைக்கின்றோம் என பிரித்தானியர் கூறினாலும் யதார்த்தத்தில் பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை என்பது இலங்கை மக்களின் இன உணர்வுக்கு எண்ணெய் ஊற்றும் பணியையே செய்தது என்பதைக் கடந்தகால வரலாறு எமக்கு உணர்த்துகின்றது.

### தேசியவாதத்தைத் தின்ற இனப்பற்று

இன உணர்வின் வெளிப்பாட்டால் இலங்கை மக்கள் மத்தியில் இலங்கை தேசியவாத உணர்வு எழுச்சி பெறுவதற்கு பதிலாக இனப்பற்று எழுச்சியடைந்தது. இந்த இன எழுச்சியினை சிங்களத்தலைமைகள் சரியாகப் பயன்படுத்திக் கொண்டுசிங்களத்தேசியவாத உணர்வைப் பலமாக கட்டமைத்துக் கொண்டனர். குறிப்பாக இந்தக் காலத்தில் சிங்கள மகாசபையானது கண்டிச் சிங்களவர், கரையோரச் சிங்களவர் என பிளவுபட்டிருந்த சிங்கள மக்களை 'நாம் சிங்களவர்' என்ற சிங்கள தேசியவாத சிந்தனையால் ஒன்றிணைத்தது. இன உணர்வால் ஒன்றிணைந்த மக்கள் மனதில் பௌத்த மத உணர்வையும் கலந்து சிங்கள தேசியவாதத்தை இனத்தாலும் மதத்தாலும் பலப்படுத்திக் கொண்டனர்.

இதன் படிநிலை வளர்ச்சியாக தீவிர சிங்களத் தேசியவாதச் சிந்தனை உருப்பெற்று, தமிழ் இனத்தை அடக்க முற்பட்டவேளை அந்தத் தீவிர சிங்கள தேசியவாத அடக்கு முறைக்கு எதிராக தமிழ் இனத்தைப் பாதுகாப்பதற்காக தமிழ்த்தேசியவாத உணர்வு எழுச்சிபெற்றது. இந்தக் கடந்த கால வரலாற்றில் இருந்துநாம் ஒரு புரிதலை பெற்றுக்கொள்ளலாம். ஆரம்பகாலம் முதல் இந்தத் தீவில் வாழ்ந்த மக்கள் மனதில் இன உணர்வே மேலோங்கிக் காணப்பட்டது. இன உணர்வு கொண்ட மக்களை ஒரு நிர்வாகக் கட்மைப்புக்குள் இணைத்த பிரித்தானியர், ஜனநாயகக் கோட்பாட்டை அறிமுகப்படுத்தி அந்த நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்ட நிலப்பரப்புக்கு 'இலங்கை' எனும் பெயரையும் சூட்டி விட்டனர். இருப்பினும் இந்தத் தீவில் வாழ்ந்த மக்கள் மனதில் இலங்கையர் எனும் இலங்கைத் தேசியவாதச் சிந்தனை வளர்வதற்கு பதிலாக இன ரீதியான தேசிய உணர்வே வளர்ச்சி பெற்றது. அல்லது பிரித்தானியரால் வளர்த்தெடுக்கப்பட்டது .

### அரசியல் கட்டமைப்பாக தமிழ்த்தேசிய சிந்தனை

பிரித்தானியருடைய பரிபூரண ஆதரவுடன் செயற்பட்ட சிங்களத் தேசியவாத ஆதிக்க சிந்தனைக்கு எதிராக தமிழ் மக்கள் குரல் கொடுத்தவேளை, சலுகை அரசியல் மூலம் தமிழ்த்தலைமைகளை சிங்களத் தலைமைகள் சமாளிக்க முற்பட்டனர். பிரித்தானியர் மற்றும் சிங்கள அரசியல்வாதிகளின் பார்வையில் அது சலுகை அரசியல் எனின் தமிழ் மக்களின் பார்வையில் அது இணக்க அரசியலாக தோற்றமளித்தது. இருப்பினும் இந்த இணக்க அரசியல் மூலம் தமிழ்மக்கள் எதையும் பெற்றுக் கொள்ளமுடியாது என்பதை ஆரம்பத்தில் பட்டறிந்து கொண்டவர் சேர். பொன்னம்பலம் அருணாச்சலம் தான்.

இலங்கைத் தேசியக் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டபோது எழுத்து மூலம் மேல் மாகாண சட்டசபைப் பிரதிநிதித்துவம் தமிழர் ஒருவருக்கு வழங்கப்படும் எனக் கூறிய சிங்கள தலைமைகள் தம் வாக்குறுதிகளை மீறி பிரதிநிதித்துவம் வழங்க மறுத்தனர். இதனால் இலங்கைத் தேசியக் காங்கிரஸை உருவாக்கிய சேர். பொன்.அருணாச்சலமே தமிழர்களின் அரசியல் உரிமை போராட்டம் தனி வழியில் பயணிப்பதே சிறந்தது என்பதை உணர்ந்து கொண்டார். இதனால் இலங்கைத் தேசியக் காங்கிரஸில் இருந்து வெளியேறி 'தமிழர் லீக் 'என்ற அமைப்பை 1923 ஆம் ஆண்டு உருவாக்கிறார். 'தமிழர் லீக்' அமைப்பின் உருவாக்கம் பற்றிப் பல விமர்சனங்கள் இருந்தாலும் அவை அனைத்தையும் கடந்து தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டம் தனிவழியில் பயணிப்பதற்கான அடித்தளமாக அமைந்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது. தமிழர் லீக்கின் ஆரம்பத்துடனே தாயகக் கோட்பாடு தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்டுவிட்டது. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் தமிழ் மக்களின் வாழ்விடமாகவும் தாயகமாகவும் திகழ்ந்துவந்த வடக்கு-கிழக்கு, தமிழர் தாயகமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. இதை நாம் இலங்கை தமிழ்த் தேசிய அரசியல் தனிவழியில் பயணிப்பதற்கான ஆரம்பப்புள்ளி எனக் கொள்ளமுடியும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








ஸ்ரீ.சாகித்யன்
தரம் - 02
யா/ புனித யோன் பொஸ்கோ வித்தியாலயம்




அ.விக்னேஸ்
தரம் - 5
யா/மகாஜனக் கல்லூரி.



சி.கிருத்திகன்
தரம் - 3
யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்



ப.அஷ்வந்,
ஞானசூரியன் முன்பள்ளி



க.தணிகன்
தரம் - 01
யா/ புனித யோன் பொஸ்கோ வித்தியாலயம்





நீங்களும்
உங்கள் கைவண்ணங்கள்,
ஆக்கங்களை அனுப்பலாம்.

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



# வஞ்சகர்களை நம்பாதே



ஒரு பெரிய குளத்தில் நிறைய மீன்கள் இருந்தன. அவைகளுடன் பெரிய நண்டு ஒன்றும் இருந்தது. வேறு பெரிய கொக்கு ஒன்றும் இருந்தது. இவைகள் நண்பர்களாக வாழ்ந்து வந்தன. ஒன்றுக்கொன்று உதவி வந்தன.


ஒரு கடுங்கோடையில் அக்குளத்தில் நீர் வற்றியது. மீன்களும் நண்டும் அங்கிருக்க முடியாமல் தவித்தன. இதைக் கண்ட கொக்கு அவைகளுக்கு உதவி புரிவதாகச் சொல்லிற்று. தனது அலகால் ஒவ்வொரு மீனாக கவ்விச் சென்று வேறு நீர் உள்ள குளத்திற்கு எடுத்துச் செல்வதாகச் சொல்லிற்று. அம்மாதிரி ஒவ்வொன்றாகக் கவ்விச் சென்றது. ஆனால் அவைகளை வேறு குளத்திற்கு எடுத்துச் செல்லாமல் ஒரு பாறையின்மேல் வைத்துக் கொன்று தின்று வந்தது.


இவ்வாறு எல்லா மீன்களையும் கவ்வி எடுத்துச் சென்று கொன்று தின்றது.

நீர் வற்றின குளத்தில் கடைசியில் நண்டு மாத்திரம் இருந்தது. கொக்கிடம் நண்டு தன்னையும் காப்பாற்றுமாறு கூறியது. நண்டையும் வேறு குளத்திற்கு எடுத்து செல்ல கொக்கு சம்மதித்தது. உடனே நண்டு கொக்கின் கழுத்தின் மேல் கவ்விப் பிடித்துக் கொண்டது. கொக்கும் பறந்து சென்றது.

பாறையின் அருகே வரும் போது நண்டு கீழே பாறையிலிருந்த மீன்களின் செதில்களைக் கண்டது. அதற்குக் கொக்கின் தீச்செயல் விளங்கிற்று. உடனே சிறிதும் தாமதியாமல் தனது கால்களால் கொக்கின் கழுத்தை அழுத்தி இறுக்கியது. இறுக்கியது. கொக்கும் மூச்சுத் திணறி கீழே விழுந்து இறந்தது. நண்டும் தப்பிச் சென்றது.

## 5 வித்தியாசங்கள் காண்க






### இலங்கை தேசிய இலச்சினையில் உள்ள அடையாளங்களும் அவற்றின் பொருள்களும்

1. **தர்மச்சக்கரம்** - தர்மமும் நீதியும்
2. **வாளேந்திய சிங்கம்**- நாடும் கட்டுப்பாடான மக்களும்
3. **நிறைகுடம்** - சௌபாக்கியம்
4. **சூரியன், சந்திரன்**- நிலைத்திருத்தல்
5. **நெற்கதிர்** - தன்நிறைவும் செழிப்பும்
6. **பூவிதழ்கள்** - தூய்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜல்லிக்கட்டும் வாடிவாசலும்

○ கோகுலராகவன்

தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு அமோகமாக நடைபெற்று முடிந்துவிட்டது.
அது ஒரு வீரவிளையாட்டு. மனிதனுக்கும் மிருகத்துக்குமான முதல் விளையாட்டு. மனிதனுக்கு மட்டுமே இது விளையாட்டு என்று தெரியும். காளைக்குத் தெரிய வாய்ப்பில்லை.
பொதுவாகவே காளைகள் தம்மை வளர்ப்பவர் தவிர மற்றவர்களின் தொடுகையை விரும்பாதவை. இதுவே இந்த விளையாட்டின் அடிப்படை.
இதனால்தான்
"தொட்டுப்பார் முடிஞ்சா தொட்டுப்பார்."
என்கிறார் அறிவிப்பாளர்
"மாடு பிடிபட்டது"
"வீரன் வெற்றி பெற்றார்."
என்கிற பழகிய அறிவிப்புக்களையும்
திரும்பச் திரும்பச் செய்கிறார்.
ஜல்லிக்கட்டு சங்க காலத்தில் 'ஏறுதழுவல்' என விளையாடப்பட்டதாக கலித்தொகை பாடல் மூலம் அறிய முடிகிறது.
"கொல்லேற்று கோடு அஞ்சுவானை
மறுமையும் புல்லாளே ஆயமகள். "
என்கிறது கலித்தொகை.
சங்க இலக்கியங்கள் இரண்டாயிரம் வருடத்துக்கும் மேற்பட்ட பழைமை கொண்டவை. ஒரு இலக்கிய வகை ஒரு வரலாற்றைப் பதிவு செய்கின்றதென்றால் அது ஒரு பாரம்பரியமாக பேணப்பட்ட விடயமாகவே இருக்க வேண்டும். திடீரென நிகழும் ஒன்றைப் பதிவு செய்யாது. ஏறு தழுவும் விளையாட்டு இன்னும் ஆயிரம் வருடம் முன்னாலேயே விளையாடப்பட்டிருக்க வாய்ப்புண்டு. ஆகவே மூவாயிரம், நாலாயிரம் வருடம் பழைமையான விளையாட்டாக ஜல்லிக்கட்டு இருக்க வேண்டும்.
சிலப்பதிகாரம் கூட இதற்கான பதிவை வைத்திருக்கிறது. சிலப்பதிகாரத்தில் ஏழு கன்னியர் ஏழு காளைகளை வளர்த்ததாகவும் அவற்றை அடக்கியவர்களுக்கே தாம் மாலையிட்டு மண முடிப்போம் என கூறியதாகவும் வருகிறது.
இதிலே
***"காரி கதனஞ்சான் பாய்ந்தானைக் காமுறுமிவ்***
***வேரி மலர்கோதையாள் சுட்டு."***
காரி என்கிற தன்காளையை அடக்கும் வீரனையே தான் காதலுறுவேன் என்கிறாள் ஒரு கன்னி.
இன்னுமொருத்தியோ
***"பொற் பொறி வெள்ளை யடர்த்தாற்கேயாகுமிந்***
***நற்கொடி மென் முலைதான். "***
என்கிறாள்.
அதாவது அவள் வளர்க்கிற காளை வெள்ளை நிறம் . அதைத் தழுவுபவனே தன் மார்பை அடையலாம் என்கிறாள்.
இதன் மூலம் சிலப்பதிகாரம் எழுந்த காலத்தில் ஜல்லிக்கட்டு என்கிற ஏறுதழுவுதல் இடம்பெற்றுள்ளதை அறியலாம். சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு. அப்போதே ஏறுதழுவுதல் தமிழர்களின் வாழ்வியலைத் தீர்மானிக்கும் ஒன்றாகப் பின்னிப் பிணைந்திருந்ததை சிலப்பதிகாரம் உணர்த்துகின்றது.
கண்ணன் ஏழு காளைகளை அடக்கி தன் காதலி 'நப்பின்னையை' திருமணம் செய்தான் என்கிறது கண்ணன் வரலாறு. தமிழ்நாட்டில் 'அலங்காநல்லூர்' ஜல்லிக்கட்டு மிக பிரபல்யமானது.
இங்கே, இந்த ஆண்டு ஆயிரம் காளைகளும், ஐநூறு ஏறு தழுவும் வீரர்களும், ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பார்வையாளர்களும் கலந்துகொண்டனர்.
சீறிப்பாயும் காளைகள் மெய்சிலிர்க்க வைத்தன.
முதலாமிடம் பெற்றவருக்கு கார் வழங்கப்பட்டது. இது இந்த விளையாட்டுக்கான முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. அலங்காநல்லூரில் விருந்தினராக, பார்வையாளராக தமிழக முதலமைச்சரின் மகனும், அமைச்சரும், நடிகருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டிருந்தார் என்பது நிகழ்வின் ஜனரஞ்சக வசியத்தைக் கோடி காட்டுகின்றது.
இந்தமுறை ஜல்லிக்கட்டு நிகழ்வினை 'யூ ரியூப்' இல் முழுமையாக பார்க்க கிடைத்தது என் பேறெனக் கொள்வேன்,
இருக்கட்டும்.
ஜல்லிக்கட்டின் இரசிகனாக என்னை மாற்றியது எழுத்தாளர் சி.சு.செல்லப்பா எழுதிய "வாடிவாசல்" என்கிற குறு நாவல் தான். அதனை நான் பத்து தடவைக்கு மேல் திரும்பத் திரும்ப வாசித்திருப்பேன். எனக்கு அவ்வளவு பிடித்த நாவல் அது . சி.சு. அந்த நாவலில் வாழ்ந்திருப்பார்.
அதன் நாயகன் 'பிச்சி'என்னிடம் இன்றும் மாறாத ஒரு பிரமையை ஏற்படுத்தி இருப்பான். அந்தளவுக்கு பிச்சியை சி.சு . வடித்து எடுத்திருப்பார்.
கதை இதுதான்.
ஏறுதழுவும் போது பிச்சியின் தந்தையான அம்புலியைக் கொன்ற ஜமீன்தாரின் காளையான 'காரியை' அடக்க, பிச்சி தன் மைத்துனான மருதனோடு அதே ஜல்லிக்கட்டுக்கு வருகிறான். அங்கே ஒரு கிழவர் இவர்களோடு பழகுகிறார் . பிச்சி அம்புலியின் மகனென்று அறிந்து அவனை உற்சாகப்படுத்துகிறார்.
பிச்சி காளையை அடக்கி தன் சபதத்தை வெல்கிறான் என்பதே நாவல்.
நாவலின் பொறிமுறையை சி.சு. அற்புதமாக நகர்த்தி ஒரு நேரடி வர்ணனை போல படைத்திருப்பார். உரையாடல், கதைக்களம். மாடு பிடிக்கும் தந்திரம் யாவும் சரியான நுட்பத்தோடு சி.சு. வால் எழுதப்பட்டிருக்கும் . சி.சு. தன்னை ஒரு மாடுபிடி வீரன் போல் மாற்றி இருப்பார்.
பெண்களைத் திருமணம் செய்யத் தொடங்கப்பட்ட ஒரு பாரம்பரிய விளையாட்டின் உட்கருத்தை சி.சு.தன் நாவலில் மாற்றி விடுகிறார்.இதில் நாவல் மெய் அர்த்தத்தை இழந்திருக்க வேண்டும். ஆனால் சி.சு.தன் கதை சொல்லும் திறமையால் நாவலை வெற்றி பெற வைத்து விடுகிறார். கலித்தொகையிலோ, சிலப்பதிகாரத்திலோ வரும் காதல் என்கிற சங்கதிக்கு நாவலில் இடம் இல்லை.
ஜல்லிக்கட்டின் மகத்துவத்தை உணர்த்திய முதல் நாவல் இதுவெனலாம் . இந்த நாவலை திரைப்படமாக்கும் முயற்சியில் இயக்குநர் வெற்றிமாறன் ஈடுபட்டுள்ளார். சூர்யா நாயகனாக நடிக்கவுள்ளார் என்றும் அறிவிப்புகள் வந்திருந்தன. இயக்குநர் வெற்றிமாறன் ஏற்கனவே எழுத்தாளர் பூமணியின் 'வெக்கை'நாவலை தனுஷை வைத்து 'அசுரன் 'என்ற படமாக எடுத்து வெற்றி கண்டவர். ஆனால் தன்படங்களில் ஒரே சாயல் நடிப்பைத் தரும் நடிகர் சூர்யா சி.சு. வின் பிச்சியாக மாறுவாரா? [illegible]?
பொறுத்திருந்துதான் காணவேண்டும். ■






பாகம் 2

○ இராகவன்


25

நவம் மாஸ்ரர் பாடம் எடுக்கேக்குள்ள தன்னை மறந்து முழு அர்ப்பணிப் போடதான் எடுப்பார். சிலவேளை சிகரெட் பத்திப் பத்தியும் பாடமெடுப்பார். அப்பிடித்தான் ஒருக்கால் எங்கட பட்ஜ் பொடியளுக்கு லொஜிக் படிப்பிச்சுக் கொண்டிருக்கேக்குள்ள அவரின்ரை வேட்டிக்கட்டுக் கழண்டு போச்சு. பொடியளுக்குப் பாடத்தைக் கவனிக்கிறதோ, வேட்டி கழண்டதை அவரிட்டச் சொல்லுறதோ எண்டு இருதலைக் கொள்ளி நிலையாப் போச்சு. எண்டாலும் ஆரோ ஒருத்தன் துணிஞ்சு சொல்லிப்போட்டான். அதுக்கு அவர், "எட கழுதையளே! இவ்வளவு நேரமும் பாடத்தைக் கவனிக்காமல் இதையே வாய்பாத்துக் கொண்டிருந்தனீங்கள்" எண்டு கேட்டுப்போட்டு வேட்டியை இழுத்து வட்டுறுப்பாக் கட்டிப்போட்டுத் தொடர்ந்து வகுப்பெடுத்தவர் எண்டு சொல்லுவாங்கள். நான் ரியூசனில அவரிட்ட லொஜிக் படிக்கேல்லை. நான் விக்கி மாஸ்ரரிட்டத்தான் லொஜிக் படிச்சனான். விக்கி மாஸ்ரரைப் பற்றித் தனியாகச் சொல்லோணும். அதைப் பிறகு சொல்லுறன்.

1994 காலப்பகுதியில் நெல்லியடி சென்ரர் ஸ்கூலிலே ஒரு வர்த்தகக் கல்விக் கண்காட்சி நடந்திச்சு. அப்ப நவம் மாஸ்ரர் எங்கடை பள்ளிக்கூடத்தில இருந்து மாற்றலாகி வடமத்திய மகளிர் கல்லூரிக்கு (செல்லையா பள்ளிக்கூடம்) போட்டார். அந்தக் கல்விக் கண்காட்சிக்கு வடமராட்சியில இருக்கிற உயர்தரப் பாடசாலைகளில் இருந்தெல்லாம் கொமர்ஸ் படிக்கிற ஏ.எல். வகுப்புப் பொடியளலெல்லாம் வந்து தங்கடை காட்சிப்படுத்தல்களைச் செய்திருந்தினம். எங்கடை பள்ளிக்கூடத்தில இருந்து நாங்கள் அங்கபோய் ஒரு 'மாதிரி வங்கியை' (Model Bank) காட்சிப்படுத்தியிருந்தம். நவம் மாஸ்ரர் படிப்பிச்ச வடமத்திய மகளிர் கல்லூரியில இருந்தும் பொம்பிளைப்பிள்ளையள் வந்து காட்சிப்படுத்தலிலை ஈடுபட்டிருந்தினம்.
அதிலை காட்சிப்படுத்தலுக்குப் பொறுப்பாநிண்ட பிள்ளையளில ஒராள் ரியூசனில எங்களோட படிக்கிறபிள்ளை. கொஞ்சம் கண்ணுக்குக் குளிர்ச்சியாயிருப்பா. எங்கடை பொடியள் தெரியாதே இப்படிச் சங்கதியள் எண்டால் அதுக்குள்ளைதானே சுத்திச் சுழண்டு கொண்டிருப்பாங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கலதாரி ஹோட்டல் குண்டுவெடிப்பு (1997 - 2004)

**1997** ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி.

காலை 6.30.

கொழும்பு கோட்டைப் பகுதியில் அமைந்திருந்த கலதாரி ஹோட்டலின் வாகனத்தரிப்பிடப்பகுதி பெரும் குண்டுவெடிப்பால் அதிர்ந்தது. 472074 என்ற இலக்கத்தையுடைய லொறியினுள் நிரப்பப்பட்டிருந்த வெடிகுண்டுகளே இவ்வாறு வெடித்துச் சிதறியிருந்தன.

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள மத்திய வங்கி குண்டுவெடிப்பு வழக்கில், விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரான பிரபாகரனுக்கு 200 வருட சிறைத் தண்டனை விதித்ததோடு, பிரபாகரனைக் கைதுசெய்யப் பிடியாணையும் வழங்கி மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய தீர்ப்பளித்திருந்த நிலையிலேயே , அதே கோட்டைப் பகுதியில் இருந்த கலதாரி ஹோட்டல் மீதான குண்டுவெடிப்பு இடம்பெற்றிருந்தது.

கொழும்பில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல்களில் மத்திய வங்கிக் குண்டுத் தாக்குதலையடுத்து ஒப்பீட்டளவு அதிக உயிர்ச்சேதங்களையும், உடைமைச் சேதங்களையும் ஏற்படுத்தியது இந்தக் குண்டுத் தாக்குதலேயாகும். கலதாரி ஹோட்டல் வாகனத்தரிப்பிடத்துக்கு அருகாமையில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட அதே வேளையில் பத்துத் தற்கொலைக் குண்டுதாரிகள் துப்பாக்கிச்சூடு நடத்திய வண்ணம் உலக வர்த்தக மையத்தினுள் புகுந்து தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தனர். ஆனால் பொலிஸாரினதும் இராணுவத்தினதும் எதிர்த்தாக்குதலை சமாளிக்க முடியாத தற்கொலைக் குண்டுதாரிகளில் மூவர் லேக் ஹவுஸ் (Lake House) கட்டடத்துக்குள் சென்று அதனைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். எனினும் இராணுவத்தினர் லேக் ஹவுஸ் கட்டடத்துக்குள் புகுந்து ஒரு தற்கொலைக் குண்டுதாரியைச் சுட்டுக்கொன்றதைத் தொடர்ந்து சில நிமிடங்களில் மற்றைய இரண்டு தற்கொலைக் குண்டுதாரிகளும் குண்டுகளை வெடிக்கவைத்து தாமும் உயிர்மாய்த்தனர். லேக் ஹவுஸ் கட்டடம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. மேலும் இரண்டு தற்கொலைக் குண்டுதாரிகள் சம்புத்தாலோக விகாரையின் அருகாமையில் உள்ள புகையிரதத் தண்டவாளத்துக்கு அருகாமையில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

எனினும் எஞ்சிய ஐந்து தற்கொலைக் குண்டுதாரிகளும் தப்பிவிட்டனர். அவர்கள் ஐவரும் தொடர்ந்து தேடப்படுவதாகவும் பொலிஸாரினால் பத்திரிகையாளர்களுக்கு செய்தி வழங்கப்பட்டது (Daily News 16/10/1997)

பொலிஸ்மா அதிபர் ராஜகுருவின் தலைமையில் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான இந்திரா டி சில்வா, டிகிரி பண்டா திசாநாயக்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் ஜயவர்த்தன, ஆகியோரின் மேற்பார்வையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்தனர். இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் தொடர்புபட்ட, பாதிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்டவர்களிடம் வாக்குமூலங்களைப் பொலிஸார் பதிவு செய்திருந்தனர் .

இந்தக் குண்டுத் தாக்குதலினாலும் தற்கொலைக் குண்டுதாரிகளின் தாக்குதல்களினாலும்

(1) சம்புத்தாலோக விகாராதிபதி விதானதெரனிய தேரர்
(2) உதவி பொலிஸ் அத்தியட்சகர் நிசங்க தர்மரத்ன
(3) பாதுகாப்புக் கடமையிலிருந்த ஆறு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
(4) நான்கு கலதாரி ஹோட்டல் ஊழியர்கள்
(5) ஒரு இராணுவ கொமாண்டோ
(6) ஒரு வெளிநாட்டு உல்லாசப்பிரயாணி
(7) உலக வர்த்தக நிலையத்தில் கடமையாற்றிய 2 பேர்
ஆகியோர் கொல்லப்பட்டிருந்தனர்.




அத்துடன்,
ஐந்து வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகள் உட்பட 113பேர் காயமடைந்தனர்.
92 வாகனங்கள் முற்றாக எரிக்கப்பட்டன
உலக வர்த்தக நிலையக் கட்டடம் சேதத்துக்குள்ளானது

மொத்தமாக 10 கோடிக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி நீதிமன்றுக்குச் சமர்ப்பித்த விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டு அந்தப் புலன்விசாரணை அறிக்கை பிரதான நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

## கந்தசாமி பற்குணராசா கைது

இந்த வழக்கில் முதல் எதிரியான கந்தசாமி பற்குணராசா, அவரது வீட்டில் வைத்து 1997ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 28ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார். அடுத்த மூன்று சந்தேக நபர்களான தம்பிராஜா லோகநாதன், சின்னத்துரை செல்வரட்ணம் மற்றும் பூபாலபிள்ளை கோணலிங்கம் ஆகியோரை பொலிஸாரினால் கைது செய்ய முடியாது போன போதிலும் அவர்களது பெயர்களையும் சந்தேக நபர்களாக உள்ளடக்கி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

### அடிப்படை மனித உரிமைகள் மனு

வழக்கின் பிரதான, முதல் எதிரியான கந்தசாமி பற்குணராசாவை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைத்து விசாரணை செய்த பொலிஸார் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை எடுக்கத் தயாராயிருந்தனர். இந்த வேளையில் மனுதாரரான கந்தசாமி பற்குணராசாவை கைது செய்து தொடர்ந்து தடுத்து வைத்து பொலிஸ் கட்டுக்காவலில் விசாரிக்கப்பட்டபோது அவர் கடுமையாக சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளார் எனவும் , மேலும் மனுதாரரின் சுயவிருப்பின்றிக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பொலிஸார் பலவந்தமாகப் பெற முயற்சிக்கின்றார்கள் எனவும், அதனால் 'சித்திரவதையிலிருந்து சுதந்திரத்துக்கான அடிப்படை உரிமை, சட்டத்தின் முன் சமத்துவம் மற்றும் சமமான பாதுகாப்புக்களுக்கான உரிமை, ஆகியவற்றுடன் பலவந்தமாகக் கைது செய்யப்படுதல் மற்றும் தடுத்து வைக்கப்படுவதிலிருந்து சுதந்திரம் ஆகிய உறுப்புரைகளின் அடிப்படையில்' சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மூலம் அடிப்படை மனித உரிமைகள் வழக்கு உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

மனுதாரரான கந்தசாமி பற்குணராசா பொலிஸாருக்கு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்க விரும்பவில்லை என்ற விடயம், பதிவுத் தபால் மூலமும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரிக்கு அனுப்பப்பட்டது.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட முதல் நாளன்று"மனுதாரர் பொலிஸ் கட்டுக்காவலில் இருக்கும்போது கடுமையாகத் தாக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளபடியினால் மனுதாரரை உடனடியாக சட்ட மருத்துவ அதிகாரியிடம் முன்னிலைப்படுத்தி மருத்துவ அறிக்கையினை உயர்நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கும்படி கட்டளையிடவேண்டும்' என சந்தேகநபர் சார்பில் உயர் நீதிமன்ற நீதியரசர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதனையடுத்து, உடனடியாக மனுதாரரை சட்ட மருத்துவ அதிகாரியிடம் சந்தேகநபரை முன்னிலைப்படுத்தி சட்ட மருத்துவ அறிக்கையைப் பெறும்படி நீதியரசர்கள் கட்டளையிட்டனர்.

கந்தசாமி பற்குணராசாவை பரிசோதித்த சட்டமருத்துவ அதிகாரியான முதித விதார பத்திரன, 1997ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19ஆம் திகதி தினத்தன்று உயர் நீதிமன்ற பதிவாளருக்கு அனுப்பி வைத்த மருத்துவ அறிக்கையில் பற்குணராசா பொலிஸ் கட்டுக்காவலில் இருந்த காலத்தில் தாக்குதலுக்கு உட்பட்டுள்ளதாகவும், அதனால் பற்குணராசாவின் உடலில் 13 அடிகாயங்களுக்கான தழும்புகள் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

மனுதாரரான கந்தசாமி பற்குணராசாவினால் உயர்நீதிமன்றுக்கு தாக்கல் செய்யப்பட்ட சத்தியக்கடதாசியில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியும் மற்றும் சில பொலிஸாரும் தன்னை மனிதாபிமானமற்ற முறையில் தாக்கி சித்திரவதை செய்தமையால் முழங்காலில் காயங்கள் காணப்படுவதாகவும், அதனால் தன்னால் எழுந்து நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் பொலிஸாரின் சித்திரவதையினால் தனது உடலில் பல காயங்கள் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.



அதற்கு ஆட்சேபனை தெரிவித்ததுடன், மனுதாரரான கந்தசாமி பற்குணராசாவுக்கு இந்தக் குண்டு வெடிப்பில் தொடர்பு உண்டு அதற்கான சான்றுகள் விசாரணையில் கிடைத்துள்ளன. அத்துடன் மனுதாரர் தான் புரிந்த குற்றம் சம்பந்தமாக நீதிவான் நீதிமன்ற நீதிபதிக்கு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார்' என்று பொலிஸார் சத்தியக்கடதாசி ஒன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

உயர்நீதிமன்றத்தில் இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது உயர்நீதிமன்ற நீதியரசர்கள் பொலிஸாரின் சத்தியக் கடதாசியினை நிராகரித்தனர். அத்துடன் சட்டமருத்துவச் சான்றிதழின் பிரகாரம் பற்குணராசாவுக்கு ஏற்பட்ட சித்திரவதை, அதனால் ஏற்பட்ட காயங்கள் என்பன மனுதாரரான பற்குணராசா பாதுகாப்பு அமைச்சரின் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் நடத்தபட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பதனால் அதனை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மனுதாரரான பற்குணராசாவுக்கு 60,000 ரூபாவினை நட்டஈடாக வழங்கும்படியும் , இதில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரசன்ன டீ அல்விஸ் 30,000 ரூபாவும் அரசு 30,000 ரூபாவும் வழங்கவேண்டும் எனவும் கட்டளையிட்டனர்.

(மிகுதி அடுத்தவாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமார் துரைக்கண்ணு

# சுந்தராம்பாள் முதல் விஜய் வரை



## அரசியலில் மின்னிய நட்சத்திரங்கள்



தமிழ் சினிமாவில் உச்ச நடிகர்களாக இருப்பவர்கள். அரசியல் களம் காண்பது புதிதல்ல. பொதுவாகவே திராவிட இயக்கங்களில் பல்வேறு திரைத்துறைச் சார்ந்த பிரபலங்கள் இடம்பெறுவதாகக் கூறுவது வழக்கம். சினிமா நடிகர்கள் மீதான கவர்ச்சியை திராவிட இயக்கங்கள் மட்டும்தான் பயன்படுத்தி உள்ளதா என்ற கேள்வியும் எழாமல் இல்லை. தற்போதைய அரசியல் களத்திலும், தேர்தலிலும் கூட அனைத்துக் கட்சிகளிலும் திரைத்துறை பிரபலங்களைக் காணமுடிகிறது. அரசியலிலும், தேர்தல் களத்திலும் திரைப்பிரபலங்களை பயன்படுத்தும் யுக்திக்கு நீண்ட நெடிய வரலாறு உண்டு. இந்தியத் திரை உலகில் அதிக தொகையை சம்பளமாக பெற்றவரும், நடிகையும், பாடகியுமான கே.பி.சுந்தராம்பாள் தான் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சட்ட மேலவை உறுப்பினரான முதல் திரைப் பிரபலம்.

மகாத்மா காந்தி, பெருந்தலைவர் காமராஜர், சத்தியமூர்த்தி ஐயர் ஆகியோரது வேண்டுகோளுக்கு இணங்க காங்கிரஸ் கட்சியின் பொதுக்கூட்ட மேடைகளில் இவர் பாடல்களைப் பாடியுள்ளார். அதே நேரத்தில், சினிமா மற்றும் நாடக கவர்ச்சியை கடுமையாக விமர்சித்தவர் தந்தை பெரியார். அவர் இந்தக் கவர்ச்சியின் மூலம் வரும் புகழை விரும்பவில்லை. ஆனால் அவரது, பாசறையில் இருந்து வந்த அண்ணா, கருணாநிதி, எஸ்.எஸ். ராஜேந்திரன், கே.ஆர்.ராமசாமி போன்றோர் திரைத்துறை பிரபலங்களாக இருந்து அரசியல் களம் கண்டவர்கள். ஆனால், பெரியார் இறுதி வரை சினிமா மற்றும் நாடகக் கவர்ச்சியால் கிடைக்கும் புகழை விரும்பாதவராகவே இருந்தார்.

இந்த முரண்பாடுகளை, அவரிடமிருந்து வெளியே வந்த பின்னர் அண்ணாவும், கருணாநிதியும் சினிமாவைத் தங்களது கருத்துப் பரப்புரைக்கான தளமாகப் பயன்படுத்தத் தொடங்கினர். குறிப்பாக இவர்கள் பணியாற்றும் திரைப்படங்களில் தி.மு.க. சார்ந்த கருத்துகளைப் பரப்புவது, கட்சிக் கொள்கைகளை விளக்குவது, உதயசூரியன் சின்னத்தை காட்டுவது என பல்வேறு வகையில் பறைசாற்றினர். இதில் அண்ணா, கருணாநிதியை போல எஸ்.எஸ்.ராஜேந்தின், நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி ஆகியோர் முக்கியமானவர்கள். இதில் கே.ஆர்.ராமசாமி முதன்மையானவர். கடந்த 1960ஆம் ஆண்டு சட்ட மேலவை உறுப்பினரானார். அந்தச் சமயத்தில் சட்ட மேலவை உறுப்பினராக 33 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு தேவை. அப்போது திமுகவிடம் 15 எம்.எல்.ஏ.க்களே இருந்தனர். அந்தச் சமயத்தில் தேவையான எம்.எல்.ஏ.க்களை வைத்திருந்த ஜனநாயக காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவால் கே.ஆர்.ராமசாமி சட்ட மேலவை உறுப்பினரானார்.

ஆனால், தி.மு.க. உருவான பின்னர், சினிமாக் கவர்ச்சியை முழுமையாக பயன்படுத்தினார் எம்.ஜி.ஆர். தனது திரைப்படங்களில் அண்ணாவின் கொள்கையைப் பேசுவது, பாடுவது, அவரது புகைப்படத்தைக் காட்டுவது, கறுப்பு, சிவப்பு கலந்த உடைகளை அணிவது என அனைத்து விதமான யுக்திகளையும் எம்.ஜி.ஆர். கையாண்டார். நாடோடி மன்னன் திரைப்படத்தில் முதன்முதலாக தி.மு.க. கட்சிக் கொடியை காட்டியவர் எம்.ஜி.ஆர். அண்ணாவின் மறைவுக்குப் பின்னர் தி.மு.க.விலிருந்து வெளியேறிய எம்.ஜி.ஆர்., 1972 இல் அ.தி.மு.க.வைத் தொடங்கினார். அடுத்த 5 ஆண்டுகளில், 1977 முதல் 1987 வரை தமிழகத்தின் முதல்வராக இருந்தார். எம்.ஜி.ஆரைப் போலவே நடிகர் சிவாஜி கணேசனை காங்கிரஸ் கட்சி பயன்படுத்தியது. 1962 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் பெருந்தலைவர் காமராஜருக்காக சிவாஜி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

இந்தியாவில் சட்டப்பேரவைக்கு தேர்வான முதல் திரைப் பிரபலம் லட்சிய நடிகரான எஸ்.எஸ்.ராஜேந்திரன் தான். 1962ஆம் ஆண்டில் நடந்த பேரவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் தேனி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதன்பின்னர் தி.மு.க.வில் ஏற்பட்ட சிக்கல்களைத் தொடர்ந்து அந்தக்கட்சியில் இருந்து விலகி அ.தி.மு.க.வில் இணைந்தார். 1980ஆம் ஆண்டில் நடந்த பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் ஆண்டிப்பட்டி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இதேகாலகட்டத்தில் அ.தி.மு.க.வில் உறுப்பினராக இருந்த ஜெயலலிதா, 1983ஆம் ஆண்டு அந்தக்கட்சியின் கொள்கை பரப்பு செயலாளர் ஆனார். 1984-1989 காலக்கட்டத்தில் மாநிலங்களவை உறுப்பினராகப் பதவி வகித்தார், கடந்த 1989 ஆம் ஆண்டில் நடந்த பேரவைத் தேர்தலில் போடிநாயக்கனூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று சட்டப்பேரவைக்குள் நுழைந்தார். 1991 ஆம் ஆண்டு தமிழகத்தின் முதல்வராக முதல் முறை பொறுப்பேற்றார் ஜெயலலிதா. அதைத்தொடர்ந்து பல்வேறு கால இடைவெளிகளில் 5 முறை தமிழகத்தின் முதல்வராக ஜெயலலிதா பதவி வகித்துள்ளார். தமிழகத்தில் எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பின், சினிமா நட்சத்திரங்கள் பலருக்கு அரசியல் ஆசை அதிகமானது. ஆனால், எம்.ஜி.ஆர். உயிருடன் இருந்தபோதே அவரது ஆட்சியை விமர்சித்தவர் டி. ராஜேந்தர். தி.மு.க. தலைவர் கருணாநிதியின் அபிமானியான இவர், அவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக தி.மு.க.வில் இருந்து விலகி 1989ஆம் ஆண்டு தாயக மறுமலர்ச்சிக் கழகம் என்ற கட்சியைத் தொடங்கினார். 1991 ஆம் ஆண்டு நடந்த பேரவைத் தேர்தலில் ஜெயலலிதாவை எதிர்த்து பர்கூர் தொகுதியில் போட்டியிட்டார். அந்தத் தேர்தலில் ஜெயலலிதா வெற்றி பெற்றார். 1996ஆம் ஆண்டில் நடந்த பேரவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் பூங்காநகர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். பின்னர் மீண்டும் தி.மு.க.வில் இருந்து வெளியேறி அ.தி.மு.க.வில் இணைந்தார். 2006ஆம் ஆண்டு தி.மு.க. வெற்றி பெற்ற பின்னர் தி.மு.க.வில் இணைந்து சிறுசேமிப்புத் துறை துணைத் தலைவர் பதவி பெற்றார். இது தி.மு.க.வில் இருந்த போது எம்.ஜி.ஆர்., எஸ்.எஸ்.ஆர். வகித்த பதவியாகும். ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் லட்சிய திராவிட முன்னேற்றக் கழகம் என கட்சியைத் தொடங்கினார் டி.ராஜேந்தர். கடந்த 1996ஆம் ஆண்டு நடந்த பேரவைத் தேர்தலில் தி.மு.க. த.மா.க. கூட்டணி பெருவாரியான வெற்றி பெற்றது. இந்தத் தேர்தலில் இந்தக்கூட்டணியை நடிகர் ரஜினிகாந்த் வெளிப்படையாக ஆதரித்து தொலைக்காட்சியில் பேட்டி அளித்திருந்தார். இதன் பின்னர் வந்த அவரது திரைப்படங்களில் அரசியல் சார்ந்த 'பஞ்ச்' வசனங்கள் இடம்பெற்றன. அவை மக்கள் மத்தியில் ஒருநாள் அவர் அரசியலுக்கு வருவார் என்ற எதிர்பார்ப்பை உருவாக்கியிருந்தன. இதே காலக்கட்டத்தில் எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகரான நடிகர் ராமராஜனின் சினிமாக் கவர்ச்சி அவரை எம்.பி.யாக்கியது. கடந்த 1998ஆம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் திருச்செந்தூர் தொகுதியில் போட்டியிட்ட ராமராஜனை மக்களவைக்கு அனுப்பியவர் ஜெயலலிதா. ஆனால், அப்போது வாஜ்பாய் தலைமையிலான மத்திய அரசு குறைவான நாள்களில் கவிழ்ந்ததால், ராமராஜன் தனது பதவியை இழந்தார்.

மறைந்த இயக்குநர் ராம நாராயணன், 1989ஆம் ஆண்டு நடந்த பேரவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் காரைக்குடி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தமிழ் சினிமாவில் நகைச்சுவை நடிகர் மறைந்த எஸ்.எஸ்.சந்திரன் தனது ஆரம்பக்கால திரைப்படங்களில் இருந்தே அரசியல் நெடி கலந்த நகைச்சுவைகளை பேசியவர். தொடக்கத்தில் தி.மு.க.வில் இருந்த அவர் பின்னர் அ.தி.மு.க.வில் இணைந்தார். கடந்த 2001-2007 காலகட்டத்தில் அ.தி.மு.க. சார்பில் மாநிலங்களவை உறுப்பினராகப் பதவி வகித்தவர். திரைத்துறையில் பொலிட்டிக்கல் சட்டையர் என்ற பாணி நகைச்சுவையை உருவாக்கியவரும், அரசியல் விமர்சகரும், இதழியலாளருமான சோ. ராமசாமி கடந்த 1999 - 2005 ஆம் ஆண்டு வரை மாநிலங்களவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். தமிழ்த் திரையுலகில் குணச்சித்திர வேடங்களில் நடித்து தனக்கென ஓர் இடத்தை உருவாக்கிக் கொண்டவர் நடிகர் சந்திரசேகர். ஆரம்பகாலத்தில் பொதுவுடைமை அரசியல் பேசிய படங்களான சிவப்பு மல்லி உள்ளிட்ட திரைப்படங்களில் நடித்த அவர், தி.மு.க.வில் இணக்கமாக இருந்து வந்தார். கடந்த 2016ஆம் ஆண்டு நடந்த பேரவைத் தேர்தலில் வேளச்சேரி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று சட்டப்பேரவை உறுப்பினரானார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மட்டுவில் வடக்கு லூர்து மாதா!

## கள்ளமில்லாச் சிறார்களின் அன்பைப் பெற்ற அன்னை

நா.தங்கவேல்

தென்மராட்சி 60 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட பரந்த பிரதேசம். இந்தப் பிரதேசத்தில் சாவகச்சேரி - தலைநகரமாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றது. இங்கு இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்துக்கள் அதிகளவில் வாழ்ந்தாலும் அனைத்து சமய மதத்தவர்களும் பரஸ்பரம் மரியாதையுடனும், கண்ணியத்துடனும் தம் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவது தனிச் சிறப்பானது.

சாவகச்சேரி கிறிஸ்தவ பங்கின் கீழ், மட்டுவில் வடக்குப் பகுதியில் குறிப்பாக கனகன்புளியடிச் சந்தியும் நுணாவில் சந்தியும் இணையும் வீதியில், மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்துக்கு அருகான தேவாலய வீதியில் அன்னை லூர்து மாதாவின் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயம் நீண்டகால பாரம்பரிய வரலாற்றைக் கொண்ட மாதா ஆலயமாகும். ஒப்பீட்ளவில் சிறிய ஆலயமாக இருந்தாலும், அங்கு வீற்றிருந்து அருளாசி புரியும் அன்னையின் அன்பு வற்றாத நீரோடை போன்றது.

அளவில் சிறியதாக இருந்தாலும், ஆலயம் அமைவு பெற்றுள்ள இடமும் அதன் இயற்கைச் சூழமைவும் பக்தர்களின் மனச் சஞ்சலங்களை நீக்கி இயல்பாகவே அமைதிகொள்ளச் செய்யும் அளவுக்கு அற்புதமானது. ஆலயத்தின் நிர்வாகிகளாகப் பலர் செயற்பட்டு மாதாவின் இல்லத்தை சிறப்பாகவே வளர்த்தெடுத்துள்ளனர். பிற்பட்ட காலத்தில் லூர்து மாதா ஆலயத்தைச் சேர்ந்த ஆசிரியர் செபஸ்ரியாம்பிள்ளை, மருத்துவக் கலாநிதி பேருது பிலிப்ஸ், மருத்துவர் எட்வேட் ஆகியோர் ஆலயப் பணிகளை மட்டுவில் பங்கு மக்களின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றினர். சிறிதாக இருந்த மாதாவின் ஆலயம் பின்னர் வளர்ச்சி கண்டது.

லூர்து அன்னையின் ஆலயம் ஒரு கத்தோலிக்க வழிபாட்டுத் தலமாக இருந்தாலும், ஆலயச் சூழமைவில் வாழும் பல இந்துக்கள் அன்னையின் அன்பை தினம் தினம் நாடுபவர்களாகவே இருந்தனர், இன்றும் அவ்வாறே இருக்கின்றனர்.

**லூர்து மாதா உற்சவம்**

அன்னை லூர்து மாதாவின் பெருவிழா ஜனவரி மாதம் 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இன்று 4ஆம் திகதி திருவிழாத் திருப்பலியுடன் நிறைவுக்கு வரும். திருவிழாத் திருப்பலியின்போது இடம்பெறும் திருச்சொரூபச் சுற்றுப்பவனி என்றும் தனித்துவமானது. ஆலயச் சூழமைவு அலங்கரிக்கப்பட்டிருக்க அன்னையவள் பக்தர்கள் மத்தியில் எழுந்தருளும் காட்சியைக் காண்பதற்கு பலநூறு பேர் திரண்டிருப்பர். திருப்பவனியின்போது தமது மனக்குறையை, துன்பத்தை, மன்றாட்டங்களை கண்ணீரோடு அவர்கள் மாதாவிடம் முன்வைப்பர். இது காண்போரை கண்கலங்க வைக்கும் உணர்வுப்பூர்வமான தருணமாகவும் அமையும்.

பிரான்ஸின் லூர்து நகரில், மாசற்றவளான லூர்து அன்னை கள்ளம் கபடம் இல்லாத குழந்தைகளுக்கு தன்னை வெளிப்படுத்திய அற்புதத்தை, இன்று பாரெங்கும் பலகோடி பக்தர்கள் பார்க்கும் வண்ணம் மெய்ப்பித்துக் கொண்டிருக்கின்றாள். அவளின் அன்பு சாவகச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள சிற்றாலயத்திலும் உணரப்படுகின்றது என்றால் அது மிகையாகாது.

# சுந்தராம்பாள்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேபோல குணச்சித்திர வேடங்களில் நடித்துப் புகழ் பெற்ற நடிகை சி.ஆர்.சரஸ்வதி, ஆரம்பம் முதலே அ.தி.மு.க.வில் இருந்து வந்தார். கடந்த 2016ஆம்ஆண்டு நடந்த பேரவைத் தேர்தலில் பல்லாவரம் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் அ.தி.மு.க.வில் இருந்து விலகிய சி.ஆர்.சரஸ்வதி, தற்போது அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பின் திரைப்படங்களில் அரசியல் பேசி நடித்து வந்த விஜயகாந்த் கடந்த 2005ஆம் ஆண்டு தேசிய முற்போக்கு திராவிட கழகம் என்ற அரசியல் கட்சியைத் தொடங்கினார். கடந்த 2006 ஆம் ஆண்டு நடந்த பேரவைத் தேர்தலில் தே.மு.தி.க. சார்பில் விருத்தாச்சலம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவரைத் தவிர தே.மு.தி.க. சார்பில் போட்டியிட்ட யாரும் வெற்றிபெறவில்லை என்றாலும் அந்தத் தேர்தலில் அந்தக் கட்சி பெற்ற வாக்கு சதவீதம் அனைத்து அரசியல் கட்சியினரையும் வியந்து பார்க்கச் செய்தது.

கடந்த 2011ஆம் ஆண்டு நடந்த பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. இடம் பெற்றது. அந்தத்தேர்தலில் ரிஷிவந்தியம் தொகுதியில் போட்டியிட்டு விஜயகாந்த் மீண்டும் வெற்றி பெற்றார். இந்தத் தேர்தலில் தே.மு.தி.க. சார்பில் பேராவூரணி தொகுதியில் போட்டியிட்ட நடிகர் அருண்பாண்டியன், ராதாபுரம் தொகுதியில் போட்டியிட்ட தயாரிப்பாளர் மைக்கேல் ராயப்பன் ஆகியோர் வெற்றி பெற்று சட்டப்பேரவை சென்றனர். பின்னர் ஜெயலலிதாவைச் சந்தித்து அருண்பாண்டியன் மற்றும் மைக்கேல் ராயப்பன் ஆகியோர் தங்களை அ.தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர்.

அதேபோல், தனது ஆரம்ப காலத்தில் தி.மு.க.வில் இருந்த நடிகர் சரத்குமார் கடந்த 1998 ஆம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் திருச்செந்தூர் தொகுதியில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். பின்னர் 2001ஆம் ஆண்டு அந்தக்கட்சியின் சார்பில் மாநிலங்களவை உறுப்பினரானார். அந்தப் பதவியை இராஜினாமா செய்த சரத்குமார் 2006 பேரவைத் தேர்தலின்போது அ.தி.மு.க.வில் இணைந்தார். 2007ஆம் ஆண்டு சமத்துவ மக்கள் கட்சியைத் தொடங்கினார். 2011ஆம் ஆண்டுபேரவைத்தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் தென்காசித் தொகுதியில் வெற்றி பெற்று சட்டப்பேரவைக்குள் நுழைந்தார். நடிகவேள் எம்.ஆர்.ராதாவின் மகனும் நடிகருமான ராதாரவி ஆரம்பத்தில் தி.மு.க.வில் இருந்தார். பின்னர் அ.தி.மு.க.வில் இணைந்தார். கடந்த 2002ஆண்டு நடந்த சைதாப்பேட்டை தொகுதி இடைத் தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின்னர் தி.மு.க., அ.தி.மு.க.வில் இருந்த ராதாரவி 2019ஆம் ஆண்டு பா.ஜ.க.வில் இணைந்தார்.

தனது உறவினரான கே.என்.நேருவால் அரசியல் களம் கண்டவர் நடிகர் நெப்போலியன். தி.மு.க.வில் இருந்த நெப்போலியன் கடந்த 2001 ஆம் ஆண்டு நடந்த பேரவைத் தேர்தலில் அப்போதைய தமிழகத்தின் பெரிய தொகுதியான வில்லிவாக்கத்தில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 2006ஆம் ஆண்டு நடந்த பேரவைத் தேர்தலில் மயிலாப்பூர் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். பின்னர் 2009ஆம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் பெரம்பலூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நெப்போலியன் மத்திய இணை அமைச்சரானார். அழகிரி ஆதரவாளர் என்பதால் கட்சியிலிருந்து ஓரங்கட்டப்பட் 2014 ஆம் ஆண்டு பாரதிய ஜனதா கட்சியில் இணைந்தார். நகைச்சுவை நடிகரான எஸ்.வி.சேகரிடம் தான் நெப்போலியன் 2006 ஆம் ஆண்டு பேரவைத் தேர்தலில் தோல்வியடைந்தார். அந்தத் தேர்தலில் மயிலாப்பூர் தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட எஸ்.வி.சேகர் வெற்றிபெற்றார். பின்னர் அந்தக்கட்சியில் இருந்து நீக்கப்பட்ட அவர் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். பின்னர் அங்கிருந்து வெளியேறி பா.ஜ.க.வில் சேர்ந்தார்.

நகைச்சுவை நடிகரும் முக்குலத்தோர் புலிப்படைக் கட்சியின் தலைவருமான நடிகர் கருணாஸ் கடந்த 2016ஆம் ஆண்டு அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்று, திருவாடனை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவர்களைத் தவிர நடிகர்கள் ஆனந்தராஜ், செந்தில், குமரிமுத்து, தியாகு, மனோபாலா, இயக்குநர் ஆர்.வி.உதயகுமார், குண்டு கல்யாணம், சிங்கமுத்து, வடிவேல், நடிகைகள் குஷ்பூ, விந்தியா, கௌதமி, சிம்ரன், கோவை சரளா, நமீதா என நட்சத்திரப் பட்டாளமே தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகளுக்கு ஆதரவாக தேர்தல் நேரங்களில் பிரசாரம் செய்துள்ளனர். 'இன்றோ,நாளையோ, நாளை மறுநாளோ அரசியலுக்கு வந்துவிடுவார்' என எதிர்பார்க்கப்பட்ட நடிகர் ரஜினிகாந்த் தனது உடல் நிலை காரணமாக அரசியலுக்கு வரவில்லை. கலைத்தாயின் இளைய மகனாக மட்டுமே பார்க்கப்பட்டு வந்த நடிகர் கமல்ஹாசன், கடந்த 2018ஆம் ஆண்டு மக்கள் நீதி மய்யம் கட்சியைத் தொடங்கி அரசியலுக்கு வந்தார். கட்சி தொடங்கிய ஓராண்டுக்குள் வந்த 2019 மக்களவைத் தேர்தலில் மக்கள் நீதி மய்யம் 37 இடங்களில் போட்டியிட்டு, 3.7 சதவீத வாக்குகளைப் பெற்றது. அதேபோல், 2021 ஆம் ஆண்டு நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில், கோவை தெற்கு தொகுதியில் போட்டியிட்ட கமல்ஹாசன் தோல்வியடைந்தார். இந்நிலையில், காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியின் முதற்கட்ட பாரத் ஜோடோ யாத்திரையின் நிறைவு விழாவில் கலந்துகொண்டு அனைவரது பார்வையையும் தன் பக்கம் திருப்பினார் கமல்ஹாசன். இவருக்கு முன்பாக, 2015இல் வீரத்தமிழர் முன்னணி எனும் அமைப்பைத் தொடங்கிய இயக்குநர் சீமான், நாம் தமிழர் கட்சி சார்பில், 2011 சட்டமன்றத் தேர்தல் மற்றும் 2014 மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராகவும், அ.தி.மு.க.வுக்கு ஆதரவாகவும் பிரசாரம் செய்தார். 2016 முதல் தொடர்ந்து அவரது கட்சியும் தேர்தல் களத்தை சந்தித்து வருகிறது.

இப்படியாக, தமிழ்த் திரை உலகில் உச்சம் தொட்ட நடிகர்கள் பலருக்கும் தமிழக அரசியல் களத்தில் தடம் பதிக்கவேண்டும் என்ற ஆசையின் இன்னொரு படியாக அரசியலுக்குள் நுழைந்துள்ளார் நடிகர் விஜய். திரையுலகில் உச்சத்தில் இருக்கும்போதே அரசியலுக்குள் நுழைந்தவர் எம்.ஜி.ஆர். தான். அவரைப் போலவே தமிழ்த் திரையுலகின் வசூல் சக்கரவர்த்தியாக இருக்கும் போதே,அதை உதறி விட்டு அரசியல் பாதைக்குள் விஜய் நுழைந்திருக்கிறார். அரசியல் என்பது கட்டுக்கடங்காத முரட்டுக்குதிரை. சரியாகக் கையாண்டால் பயணத்தை இலகுவாக்கும், இல்லாவிட்டால் காலால் உதைத்துத் தள்ளிவிடும். இந்த அரசியல் குதிரை விஜயைச் சுமந்து கொண்டு பறக்கப்போகிறதா? இல்லையேல் காலால் உதைத்துத் தள்ளப்போகிறதா?

# தமிழரசுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிக்குள் நுழைந்ததிலிருந்து அவர் எப்பொழுதும் ஒரு "கிங்மேக்கராகவோ" அல்லது பட்டத்து இளவரசனாகவோ தான் தன்னைக் கட்டமைத்துக் கொண்டார். அதற்கு சம்பந்தரும் ஆதரவு. கட்சிக்குள் இரண்டாம், மூன்றாம் நிலைகளில் இருப்பதற்கு அவர் பழக்கப்படவில்லை. தோற்கடிக்கப்பட்ட பின் அவரைப் பொறுத்தவரை அவரைவிடத் தகுதி குறைந்தவர் என்று அவர் கருதிய சிறீதரனின் கீழ் அவர் செயற்படவேண்டியுள்ளது. அதற்கு அவருடைய "ஈகோ" இடம் கொடுக்குமா? மேலும் இந்தத் தோல்வியானது,அவருடைய எதிர்காலத் தேர்தல் தோல்விகளையும் தீர்மானிக்கக்கூடும். அப்படிப்பட்டதோர் சூழலில்,அவர் தேசியப்பட்டியல் ஆசனத்தைக் குறி வைக்கக்கூடும்.அதற்கு செயலாளர் அவருடைய ஆளாக இருக்க வேண்டும். அதனால்தான் தன்னைச் செயலாளராக நியமிக்கக் கேட்டிருக்கிறார்.அது நடக்கக்கூடிய காரியம் இல்லையென்று அவருக்கே தெரியும். ஆனால் அதன்மூலம் கிழக்கில் உள்ள தன்னுடைய ஆளை செயலாளராக நியமிக்குமாறு நிர்ப்பந்திக்கலாம் என்பதை அவர் சரியாகவே கணித்திருந்தார்.இது அவர் எதிர்காலத்தில் தேசியப் பட்டியல் ஆசனத்தைக் கைப்பற்றுவதற்கான முஸ்தீபு.அதாவது சுமந்திரன் கட்சிக்குள் தொடர்ந்தும் தனது முதன்மையைத் தக்கவைக்க முற்படுகிறார் என்று பொருள். அவர் சிறீதரனுக்கு எழுதிய பகிரங்கக் கடிதத்தில் அது தெரிகிறது.

கடிதம் எழுத வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? சிறீதரனோடு அதை நேரடியாக காதும் காதும் வைத்ததுபோல ஏன் பேச முடிய வில்லை? அது இருவரும் தூரமாக இருப்பதைக் காட்டுகின்றதா?அதனை பகிரங்கப்படுத்துவதன் மூலமும்,அதை எழுத்தில் முன்வைப்பதன் மூலமும்,குறிப்பாக கடிதத்தில் சில சட்ட நுணுக்கங்களைச் சுட்டிக்காட்டுவதன் மூலமும் எதிர்காலத்தில் சிறீதரனின் அணிக்கு எதிராகச் சட்டரீதியாக நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்ற மிரட்டல் அங்கே உண்டா?

கட்சிக்குள் தன்னுடைய முக்கியத்துவத்தைத் தக்கவைக்க முடியவில்லை என்றால் அவர் கட்சிக்கு வெளியே போவாரா? ஒரு புதிய கட்சியை உருவாக்குவாரா? அதாவது தமிழரசுக் கட்சி உடையுமா? சுமந்திரன் ஒரு "கிங் மேக்கர்"தான். ஒரு "கிங்கைப்"போல ஒரு புதிய கட்சியைக் கட்டியெழுப்புவாரா? ஆனால் செயலாளர் தெரிவில் ஏற்பட்ட குழப்பம் மக்கள் மத்தியில் சுமந்திர னுக்குப் பாதகமான விளைவுகளைத்தான் ஏற்படுத்தியிருக்கின்றது. சுமந்திரன் தோல்வியை ஒப்புக்கொள்ள மறுத்து அளாப்புகிறார் என்ற அபிப்பிராயம் மேலெழுந்திருக்கிறது.

அவர் சிறீதரனுக்கு எழுதிய கடிதம் சாதாரண மக்களை அதிகம் சென்றடையாது. அரசியல் ஈடுபாடுடைய; அரசியல் கட்டுரைகளை வாசிக்கின்றவர்கள் மத்தியில் அதற்கு ஒரு கவனிப்பு இருக்கும். ஆனால் சாதாரண வாக்காளர்கள் சுமந்திரனை ஓர் அளாப்பியாகத்தான் பார்க்கிறார்கள்.

சிறீதரனைப் பொறுத்தவரை அவர் பழைய கூட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்று ஆசைப்படுகிறார்.ஆனால் ஏனைய கட்சிகளை ஒருங்கிணைக்க முன்பு அவர் தன்னுடைய சொந்தக் கட்சிக்குள் தன்னுடைய நிலையைப் பலப்படுத்தி கட்சியை ஒரு கட்டிறுக்கமான நிறுவனமாகக் கட்டியெழுப்ப வேண்டியவராகக் காணப்படுகிறார்.கட்சி இரண்டாக உடைவதைத் தடுப்பதென்றால் இப்போதைக்கு சுமந்திரன் அணியை அனுசரித்துப் போகவேண்டும். கடந்த சில தசாப்தங்களுக்குள் தென்னிலங்கையில் இரண்டு பாரம்பரியக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஏற்கனவே சிதைந்து விட்டன. அது ஈழப்போரின் நேரடி விளைவு.ஆனால் தமிழ்மக்கள் மத்தியில் ஈழப்போரின் நேரடி விளைவாக இரண்டு பாரம்பரியக் கட்சிகளும் இப்பொழுதும் அரங்கில் நிற்கின்றன.அவை பண்புருமாற்றத்துக்குத் தயாரா?

பல ஆண்டுகளுக்கு முன் தமிழகம்,விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் யாழ்ப்பாணம் வந்திருந்தபொழுது தனிப்பட்ட சந்திப்பின்போது இந்தக்கட்டுரை ஆசிரியரிடம் சொன்னார்..."உங்களுடைய தலைவர்களில் பலர் தீர்ந்துபோன சக்திகள்(spent forces) என்று".தீர்ந்துபோன சக்திகளை வைத்துக்கொண்டு கட்சிகளைப் புதுப்பிக்கலாமா ? பல தசாப்தங்களுக்கு முன்பு செல்வநாயகம் சொன்னார்...தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்று.ஆனால் இப்பொழுது அவருடைய கட்சியை அவருடைய கட்சிக்காரரிடம் இருந்தே காப்பாற்றுவது எப்படி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org